உலக மகளிர் தினம் - பங்குனி 08
ஞாபகார்த்த வெளியீடு

# ஆற்றல்

1336

அன்பளிப்பு ரூபா 5/- பக்கங்கள் 24

யாழ் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம், 76, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

மலர்: 02 பங்குனி / March - 2000 இதழ்: 12

## சர்வதேச மகளிர் தினம்
## 08 பங்குனி MARCH 2000

டென்மார்க், கோப்பன்ஹேகன் நகரில் 1910ம் ஆண்டு சர்வதேச சோஷலிச பெண்களின் 2வது மாநாட்டில் பெண்ணுரிமை வாதியான கிளாரா ஸெற்கின் என்பவரால் முன்மொழியப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1911-03-08 அன்று தொடங்கியது: ''பெண்கள் தினம்''

1987 மார்ச் 08ல் நியூயோர்க் நகரில் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்த பெண்கள் தமது உரிமைக்காக வேலை நிறுத்தம் செய்து, வீதியிலிறங்கிப் போராடியதை; அதாவது முதன் முதலாகப் பெண்கள் ஒன்றிணைந்த முறையில் தமது உரிமைகளிற்காக நடாத்திய போராட்டம் என்ற வகையில், இத் தினம் நினைவு கூரப்பட்டு உலகெங் குமுள்ள பெண்களின் அபிவிருத்தியில் பங்கெடுக்கும் நிறுவனங்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத் தினம் சமூகத்தில் பெண்களின் இரண்டாம் பட்ச நிலையை நீக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டது.

– ஆதாரம்: ''பெண்''

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
27 A, Lady Manning Drve
Batticaloa.

### திருக்குறள்
**அறிவுடமை - அதிகாரம் 43 - 423**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு.

எவர் எவர் எந்த எந்தப் பொருளைச் சொன்னாலும்
அவர் சொன்னவற்றை அப்படிகே கொள்ளாமல்
அவர்களின் கருத்துக்களில் உள்ள உண்மைப்
பொருளை ஓர்ந்து காண்பதே அறிவாகும்

**யாழ் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தினது சகோதர நிறுவனமாகிய யாழ் "மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்"**

1998ம் ஆண்டு மே மாதம் 15–ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

தென்னிலங்கை மகளிர் ஸ்தாபனங்களது திட்டங்களை அறிமுகம் செய்து கொள்ள Unicef ஆதரவில் 20 யாழ் மகளிர் சுற்றுலா பயணமொன்றினை மேற் கொண்டனர்.

இவர்கள் யாழ் நகர் திரும்பியதும் திருவாளர் தி. திருலிங்கநாதன் அவர்களின் ஆலோசக அனுசரணையுடன் தமது நிறுவனத்தை ஆரம்பித்தனர். இருபது மகளிராக தொடங்கியகியவர்கள், இரண்டு ஆண்டுகளில் துரிதமாக வளர்ந்து அங்கத்தவர் தொகையினை 1000 க்கும் மேலாக பெருக்கியது பெருமைக்குரிய விடயமே.

இவர்களது ஆற்றலின் திறத்தை வெளிப்படுத்தும் முகமாக அவர்களது நடவடிக்கைப் பட்டியலை சுருக்கமாக செயலாளர் **செல்வி உமா நவரட்ணம்** அவர்களிடமிருந்து பெற்றுத் தந்துள்ளோம்.

**யாழ் மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்**

ஆரம்ப தினம்: 15–05–1998
கிளைகள்: 19 அங்கத்தவர்: 1003

**நாடாத்தப்பட்ட பயிற்சிகள்:**

01. மாற்று முகவரைத் தோற்றுவிக்கும் (வடமராட்சி தென்மராட்சி வலிகாமம்) புயிற்சி நெறி – 30 நாட்கள்: 30 மகளிர். நிதி: தேசிய ஒருங்கிணைப்பு, இன விவகார அமைச்சு.
ஆதரவு: வடக்கு / மீள் குடியேற்ற, புனர் வாழ்வு அதிகார சபை

02. ஆரம்ப பாலர் அபிவிருத்தி பயிற்சி: 10 நாட்கள்
முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி 10 நாட்கள்
முதலுதவி பயிற்சி: 04 நாட்கள்
பங்குபற்றியோர் — 112 மகளிர் நிதி / ஆதரவு: மகளிர் விவகார அமைச்சு.

03. சிறுமுயற்சி: சுயதொழில்களில் மகளிர் ஆற்றல் மேம்பாட்டு பயிற்சி நெறிகள்: 42 நாட்கள்.
பங்குபற்றியோர் – 90 மகளிர்
நிதி / ஆதரவு — UNHCR
யாழ், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் தெல்லிப்பளை, கோப்பாய், பளை, சாவகச்சேரி

04. முதலுதவிப் பயிற்சி: சென்ஜோன் அம்புலன்ஸ்: 10 நாட்கள்
பங்குபற்றியோர் — 120 மகளிர்
நிதி / ஆதரவு — UNHCR

05. வலைப் பந்தாட்டப் போட்டி: 8–3–2000
06 அணிகள் — பங்குபற்றியோர— 72மகளிர்
நிதி / ஆதரவு – மகளிர் விவகார அமைச்

06. சர்வதேச மகளிர் தின விழா: 8–3–2000
வைபவமும் சான்றிதழ் வழங்கலும் யாழ். இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.
நிதி / ஆதரவு: மகளிர் விவகார அமைச்சு.

2000 ம் ஆண்டு தொடக்கம் அமுலாக்கப்படவுள்ளவை:

1. 25 அம்சத் திட்டம் இதனது செயற்பாட்டு அறிக்கை மகளிர் விவகார அமைச்சு நிதி பரிபாலன பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
2. உளவளத் துணைவர்களாக மகளிரை வளர்த்தெடுக்கும் திட்டம்.
3. ஆரம்ப பாலர் அபிவிருத்தி, முன் பள்ளி ஆசிரியர் பயிற்சி – 70 நாட்கள் பயிற்சி பாடவிதானம் தொகுக்கப்படுகின்றது.
4. சித்த மருத்துவ அபிவிருத்தி – மேல் பட்டதாரிகள் சபைக்கு ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அங்கை... என்னவாம்...**

[03ம் பக்கத் தொடர்ச்சி]

மோஸாம்பிக் நாடு தென் ஆபிரிக்காவில் இந்து சமுத்திர ஓரத்தில் உள்ளது. 13 வருட கால உள்நாட்டுப் போர் ஒருவாறு ஓய்ந்தது. பல்லாயிரக் கணக்கான, அண்டை நாடுகளில் இருந்து, சொந்த வீடுகளுக்கு ஆரவாரக் களிப்புடன் திரும்பினர்.

சொற்ப நாட்களுக்குள் அடை மழை விடாது தொடர்ந்து பெய்ததால், பெரும் அழிவும் உயிர் சேதமும் ஏற்பட்டது. மூன்று கிழமைகளாக பெய்த மழை ஒருவாறு ஓய்ந்தது.

பட்ட காலிலே படும் என்றவாறு, இரொண்டொரு நாட்களின் பின்னர் இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட தாழ் அமுக்கம் காணமாக சூறாவழி ஒன்று இப் பரிதாபத்துக்குரியோரை தாக்கியது.

# அங்கை... என்னவாம்?!!

இம் முறை இடம் பற்றாததால் பல முக்கிய விஷயங்களை நாம் தவிர்த்துள் ளோம்.

சித்திரை மாதம் தொடக்கம் இப் பகுதியை விரிவாக்குவோம்.

சன்ரியாகோ, சீலி: நிக்கார்டோ லாகோஸ் எஸ்கோபார் / Ricardo Lagos Escobar, 61 வயது சட்டத்தரணி / பொருளியியாளர், தற்போதைய நாட்டுத் தலைவர்.

27 வருடங்களுக்கு முன்னர், 1973ல் சல்வடோர் அலன்டே கொஸென்ஸ் / Salvador Allende Gossens அமோகமாக வாக்குகளால் தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டார் இவர் இடதுசாரி சோஷலிஸ்ற் என்பதால் இவரையும், சகாக்கள் சிலரையும், கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றினார் இராணுவத் தளபதி ஜெனறல் அகொஸ்ரோ பினோடி உகார்ரே/ General Augusto Pionchet Ugarte. 17 வருடகாலம் 1990 வரைக்கும் ஆட்சிபுரிந்து, அரசியலில் எதிர் வாத கொள்கை கொண்டோரை சித்திரவதை, கொலை செய்து, ஏனையோரை சிறையிலடைத்து அட்டூளியம் புரிந்து நாட்டில் ஆட்சி புரிந்தார்.

ஈற்றில் வயதான காலத்தில், ஜனநாயக ஆட் சிக்கு வழிவகுத்து, பதவி விலகும் போது தனது ஆயுட்காலம் வரை செனற் சபை அங்கத்தவராக பதவி வகித்து சட்டம் இயற்றினார். மேலும், தனக் கும் தனது சக இராணுவ அதிகாரிகளுக்கும், பொது மன்னிப்பு தம் வழங்கினார்.

1998ம் ஆண்டு சிகிச்சை பெறுவதற்கென France நாடு செல்ல முற்பட்டபோது விசா மறுக்கப்பட்டது. பின்னர், இங்லாந்து சென்று தனியார் மருத்துவ மனை ஒன்றில் சேர்ந்தார்.

ஸ்பெயின் / Spain நாட்டு 4 பிரஜைகளினது கொலைக்கு இவரே காரணம் என வழக்கு தாக்கல் செய்ததால், இவரை விசாரனைக்கு தம்மிடம் ஒப் படைக்கும் படி ஸ்பெயின் நீதவான் இங்லாந்து அரசை கேட்டார். இதே போன்று பிரான்ஸ், பெல் ஜியம், சுவிஸ்லாந்து நாடுகளும் கோரின.

தனியார் மருத்துவமனையில் கைதாகி, தடுப்புக் காவலில் இருந்த இவரை, 04 பிரித்தானிய மருத் துவர்கள் தனித் தனியே சோதனையிட்டு 82 வய தான பினோஷே சுகயீனம் காரணமாக விசார ணைக்கு முகம் கொடுக்க இயலாத நிலையில் உள் ளார் என மருத்துவ அறிக்கை சமர்ப்பித்தனர்.

இவ் அறிக்கைகளை இவரைக் கோரிய 4 நாடு களுக்கும் அனுப்பும் படி பிரித்தானிய மேல் நீதி மன்றம் உத்தரவிட்டது. இந் நாடுகளின் கருணை கலந்த முடிவை எதிர் பார்த்து கடந்த 16 மாதங் களாக தடுப்புக் காவலில் இருந்து கலங்குகின்றார். அகஸ்ரோ பினோஷே.

கத்தோலிக் சமயத்தின் 2 வது அதிகாரியான கார்டினால் அன்ஜலோ ஸொடானா, 84 வயதான பினோஷே தனது சொந்த நாட்டிற்குச் செல்வதற்கு உரிமை உள்ளதென அறிவித்துள்ளார். பினோஷே யின் காலத்தில் அழிந்துபோன 3,000 மக்களது உறவினர்க்கு ஆறுதல் சொல்ல கார்டினல் ஸொடா னோ விற்கு எண்ணம் தோன்றவில்லைப் போலும்!

"அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்" என்பது பொய்யாகாது.

ஜக்கார்ரா, இந்தோனிஷியா: ஜனாதிபதி அப்துர்ரஹ்மான் வாகீட் உள்நாட்டு பாதுகாப்பு மந் திரியும், முன்னாள் இராணுவ தளபதியுமான ஜென றல் விறான்ரோ என்பவரை இராஜினமா செய்யும் படி பணித்தார். விறான்ரோ மறுத்தார். வாகீட் விட்டுக்கொடுத்தார். இரு நாட்களின் பின்னர் வாகீட் பதவி நீக்கக் கடிதத்தை விறான்ரோ வுக்கு அனுப்பி அவரை தனது மந்திரி சபையிலிருந்து நீக்கிவிட்டார்.

காரணம்: ஜெனரல் விறான்ரோ கிழக்கு திமோ றில் மனித உரிமை மீறல் வன் செயல்களுக்கு பொறுப்பானவர் என ஐக்கிய நாட்டு குழுவினது அறிக்கையிலும், Human Watch என்னும் மனித உரிமை குழுவினது அறிக்கையிலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதே!

ஜனாதிபதி வாஹீட் கிழக்கு திமோர் தலைநக ரான டிலி சென்று 25 வருட காலமாக கிழக்கு திமோர் ஐ பலவந்தமாக ஆட்சி புரிந்ததற்கும், மனித உரிமை மீறல் வன் செயல்களுக்கும் பகிரங்க மன் னிப்புக் கோரினார்.

வாஹீட் ஓர் துணிந்த, பரந்த மனம் கொண்ட உத்தமமான மனிதரே!

லாகோஸ், நைஜீரியா: வடக்கு மாகா ணங்கள் இஸ்லாமிய ஷரியா சட்டங்களை அமுல் படுத்தப் போவதாக அறிவித்தன. வடக்கில் கன்டு/ Kandu என்னும் நகரில் கிறிஸ்தவர்களுக்கும், இஸ் லாமியருக்கும் இடையில் வன்செயல் வெடித்தது. 20 மக்கள் உயிரிழந்தனர். சமய கோயில்களும், மசூதிகளும் தீக்கிரையாகின.

தெற்கிலும் வன் செயல்கள் பரவின. 50 மக் கள் உயிரிழந்தனர்.

ஜனாதிபதி அபஸன்ஜோ வினால் கூட்டப்பட்ட மாகாண ஆழுநர் கூட்டத்தில் ஷரியா சட்டத்தை அமுல்படுத்துவதை தற்போதைக்கு தடைசெய்வது என தீர்மானிக்கப்பட்டது. இதனால் அமைதி நிலவு கின்றது.

ஷரியா சட்டம் இஸ்லாமியருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் மட்டுமே பொருந்தும் எனவும் ஓர் கருத்து நிலவுகின்றது. இது போற்றத் தக் கதே!

[02ம் பக்கம் பார்க்கவும்]

# "முகாமைக் கணக்கீடு"
# "Management Accounting"

கணக்கீட்டு விகிதங்கள் / Accounting Ratios
2000 ஆண்டுக்கான பாடத்திட்டத்திற்கமைய
க. பொ. த. உயர் தர — சாதாரண
மாணவர்க்கென விஷேடமாக
தொகுக்கப்பட்டது.

ஆக்கியோன்:
S. D. J. சுதர்சன்

## விகித அடிப்படையில் நிதிக் கூற்றுக்களுக்கு விளக்கம் அளித்தல்

நிதிக் சுற்றுக்களின் நோக்கம் – Aim of Financial Statement

நிதிக் கூற்றுக்கள் மீது அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு தேவையான மிகச் சிறந்த பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான தகவலை வழங்கலே நிதிக் கூற்றின் பிரதான நோக்கம் ஆகும்.

நிதிக் கூற்றுக்களை பகுப்பாய்வு செய்தல், வியாய்கியானம் கூறல்.
Analysing and Interpreting the Financial Statements

நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ள விடயங்களில் இருந்து நிறுவனத்தின் நிதி சார்ந்த திறன்களையும் திறமையீனங்களையும் இனம் காட்டும் ஒரு கருவியே இதுவாகும்.

நிதிக் கூற்றுக்களை வியாய்கியானம் செய்வதற்கு கையாளக் கூடிய பிரதான நுட்ப முறைகள்.

1. கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு
2. பொதுவான அளவீட்டு நிதியறிக்கைகள்
3. ஒப்பீட்டு ரீதியான நிதியறிக்கைகள்
4. காசுப்பாய்ச்சல் [கூற்றும் நிதி நிலமை மாற்றங்களைக் காட்டும் கூற்றும்.

### நிதிக் கணக்கீட்டு விகிதப்பகுப்பாய்வு
Financial Accounting Ratio Analysis

நிறுவனத்திதின் நிதி நிலைமை அதன் செயற்பாடு ஆகிய தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அதன் நிதித் திறன் பற்றிய பல்வேறு பகுப்பாய்வுகளை கணக்கீட்டு விகிதங்கள் மூலம் மேற்கொள்ளப்படின் அதனையே நிதிக் கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு எனப்படும்.

நிதிக் கணக்கீட்டு விகிதம் Fidaneial Accounting Ratio.

ஒரு நிறுவனத்தின் நிதியறிக்கையின் இடை நிலைத் தொடர்புகள் கொண்டுள்ள இரு கணக்கீட்டுத் தரவுகளுக்கிடையிலுள்ள தொடர்புத் தன்மையை கணித ரீதியாகச் சபர்ப்பித்தல் கணக்கீட்டு விகிதம் எனப்படும்.

### கணக்கீட்டு விகிதங்களை ஒப்பிடுவதன் அவசியம்

கணித்துக் கொள்ளப்பட்ட விகிதங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் செயற்பாடு பற்றிய முடிவுகளைத் தீர்மானிக்க முடியாது. எனவே விகிதங்கள் மூலம் வெளிப்படுத்தக் கூடிய தகவல்கள் பற்றிய முடிவுகளுக்கு வருவதற்காக அவை ஏனைய விகிதங்களுடன் ஒப்பிடப்பட வேண்டும்

### கணக்கீட்டு விகிதங்களை ஒப்பிட வேண்டிய முறைகள்.

1. குறித்த நிறுவனத்தின் கடந்த காலத்திற்குரிய விகிதங்களுடன் ஒப்பிடுதல்.
2. குறித்த நிறுவனத்திற்கு சமமான ஏனைய நிறுவனங்களின் விகிதங்களுடன் ஒப்பிடுதல்.
3. நிறுவனம் உள்ளடக்கி ஏனைய திணைக்களங்களின் விகிதங்களுடன் ஒப்பிடுதல்.
4. எதிர்வு கூறப்பட்ட விகிதங்களுடன் ஒப்பிடுதல்.

### கணக்கீட்டு விகிதங்களின் அனுகூலங்கள்
Advantages

1. நிறுவனத்தின் இலாபத்தன்மையும் வினைத்திறனையும் எளிதாக புரிந்து கொள்ளக் கூடிய திறன் ஏற்படல்.
2. பெருந்தொகைப் புள்ளிவிபரங்களை பொழிப்பாக்கி அவற்றை எளிதாக சமர்ப்பிக்கப் கூடிய திறனை பெறல்.
3. தகவல் தொடர்பாடலை வினைத் திறனாக மேற்கொள்ள உதவுதல்.
4. தனிப்புள்ளி விபரங்களை மாத்திரம் எடுத்து கொள்வதால் ஏற்படக் கூடிய பிழையான வழி காட்டலை நீக்கிக் கொள்ள முடிதல்.
5. கடந்த ஆண்டுகளுடன் அல்லது சமமான ஏனைய நிறுவனங்களின் பெறுபேறுகளுடன் ஒப்பிடக் கூடிய திறனை ஏற்படுத்துதல்.
6. நிறுவனத்தின் போக்கை எளிதாக புரிந்து கொள்ளக் கூடிய திறன் ஏற்படல்.
7. எளிதாகவும் விரைவாகவும் தீர்மானம் முடிவுகளை எடுப்பதற்கு உதவுதல்.
8. எதிர்காலத் திட்டங்களை மேற்கொள்வதற்கு பயனுள்ள தகவல்களை வழங்கல்.

### எதிர்வு கூறல் நோக்கத்துக்கு பயன்படுத்தப் படும் போது கணக்கீட்டு விகிதத்தின் குறை பாடுகள் / வரையறைகள்—
Disadvantages / Limitations

1. கணக்கீட்டு கொள்கைகள் ஒரு நிறுவனத்திற் குள்ளே வெவ்வேறு ஆண்டுகளுக்கிடையேயும் வேறுபடுகின்றன.

[21ம் பக்கம் பார்க்க]

# நில அளவை வகைகளுள் சங்கிலி நாடா நில அளவை முறை:

## ஓர் அடிப்படை விளக்கம்

செல்வி சோபனா பிறேமினி ஸ்ரீபன்
B. A. (Hons)
யாழ் பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

[சென்ற மாத இதழ் தொடர்]

### சங்கிலிக் கோட்டின் வழியே தடைகள் (Obstacles) அமையும் போது நிவர்த்தி செய்யும் முறைகள்:

அளவையின் போது கட்டிடங்கள், குளங்கள், கால்வாய்கள் போன்ற தடைகள் சங்கிலிக் கோட்டின் வழியே காணப்படும்போது தடைக்கு அப்பால் தொடர்ந்து அளவையை மேற்கொள்ள சங்கிலிக் கோட்டினது தடைப்படும் நீளத்தை சங்கிலியுடன் சார்ந்த செங்கோணங்களை அமைப்பதன் மூலம் பெற முடியும்.

அ) கட்டிடம், குளம் போன்றவற்றால் சங்கிலிக் கோடு தடைப்படும்போது:




(a, b, c, d – நிரைகோல்கள் பொருத்தப்படும் புள்ளிகள்)

தடையைச் சுற்றி அமைக்கப்பட்ட செங்கோணங்களைக் கொண்டு, ad யின் நீளத்தை, bc யினது நீளத்தை அமைப்பதன் மூலம் பெறமுடியும். எனவே சங்கிலிக்கோடு AB யின் மொத்த நீளமானது, Aa dB யினது நீளத்தை இணைப்பதன் மூலம் பெற முடியும்.

AB யின் மொத்த நீளம் = Aa + dB

ஆ) கால்வாய், ஆறு போன்றவற்றால் சங்கலிக் கோடு தடைப்படும்போது;




[A, B – சங்கிலிக்கோடு]
(C, G, F, E — நிரைகோல்கள் பொருந்தும் புள்ளிகள்)

சங்கிலிக் கோட்டின் வழியே புள்ளி C யில் செங் கோணம் அமையுமாறு EC கோட்டை அமைக்க. CD = DE ஆகுமாறு E, D புள்ளிகளில் நிரைகோல் களைப் பொருத்துக. அடுத்து E, C கோட்டிற்கு செங்கோணம் அமையுமாறும், புள்ளிகள் F, D, G என்பன ஒரே நேர்கோட்டில் அமையுமாறும் கோடு FE ஐ அமைக்க புள்ளி F இல் நிரைகோலைப் பொருத்துக. FE யினது நீளத்தை அளக்கும் போது, அது CG யின் நீளத்திற்குச் சமனாக அமையும்.

சங்கிலிக் கோடு ABயின் மொத்த நீளம் AC FE GB யினது மொத்த நீளங்களின் கூட்டுத்தொகை ஆகும்.

(AB யின் மொத்த நீளம் = AC + FE + GB நீளங்கள்)

### சாய்வு நிலத்தில் மேற்கொள்ளப்படும் படிமுறை அளவை (Stepping Survey in Slope land)




a, b, c, நிரைகோல்கள்

சரிவுத்தரையில் இரு புள்ளிகளிற்கிடையிலான கிடையான தூரத்தை அளவிடுவதற்குப் படிமுறை அளவை (Stepping) பயன்படுத்தப்படுகிறது.

[20ம் பக்கம் பார்க்க]

# வரலாறும் சமூகக்கல்வியும்

சி. ஸ்ரனிஸ்லாஸ் B, A, Dip - in - ED
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## ஆண்டு 11

(சென்ற மாத இதழ் தொடர்)

(29) சுதேசப் பண்பாட்டிற்குப் புத்துயிர் அளிப்பதற்காகத் தோன்றிய இயக்கங்களும் அவற்றின் முன்னோடிகளும் யாவர்?

பௌத்த பிரம்ம ஞான சங்கம் — கேணல் ஒல் கொட்

மகாபோதி சங்கம்

பௌத்த வாலிபர் சங்கம்—அநகாரிக தர்மபால

இந்துசமய இயக்கம் — ஆறுமுக நாவலர்

இஸ்லாம் சமய மறுமலர்ச்சி — சித்திலெப்பை

இயக்கம்

மதுவிலக்கு இயக்கம் – D. S. சேனநாயக்கா

(30) 1989 ம் ஆண்டு இங்கிலாந்தின் உரிமைச் சட்டத்தின் அம்சங்கள் எவை?

1) மக்கள் பிரதிநிதிகளின் அனுமதி இன்றி மன்னன் வரிகளை விதிக்கக்கூடாது.

2) நிரந்தரமான போர்ப் படைகளை பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் வைத்திருக்கக் கூடாது.

3) பாராளுமன்றத்தின் பேச்சுச் சுதந்திரம், விவாதச் சுதந்திரம், தீர்மானம் மேற்கொள்ளும் சுதந்திரம் என்பவற்றில் மன்னன் தலையிடக் கூடாது.

4) புதிய சட்டங்களையோ முன்னரே உள்ள சட்டங்களையோ மன்னனுடைய பிரகடனத்தின் மூலம் நிறைவேற்ற முடியாது.

5) மன்னன் கொடூரமான அல்லது மனிதாபிமானமற்ற தண்டனைகளை விதிக்கமுடியாது.

(31) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட அனுகூலங்கள் 2, பிரதி கூலங்கள் 2 தருக.

அனுகூலங்கள்.

1) மக்களின் வருமானம் அதிகரிக்கவும் வாழ்க்கைத் தரம் உயர்வடையவும் வழி ஏற்பட்டது.

2) பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலை முறை பயன்படுத்தப்பட்டமையால் சிறந்த தரமான பொருட்கள் பெருமளவில், சுலபமாக உற்பத்தி செய்யப்பட்டன.

பிரதி கூனுகூலங்கள்

1) கைத்தொழில் நாடுகளுக்கிடையில் போர் ஏற்பட்டு உலகப் போர் தோன்றுவதற்கு வழி ஏற்பட்டது.

2) பொறிகளின் உபயோகம் காரணமாக வேலையில்லாப் பிரச்சனைகள் தோன்றின.

(32) இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குரிய காரணங்கள் எவை?

அ) ஹிட்லரின் எழுச்சியும் ஆக்கிரமிப்புக்களும்

ஆ) நாசிசவாதம் சேர்மனியில் பரவியமை

இ) இத்தாலியில் பாசிச வாத முசோலினியின் செயற்பாடுகள்

ஈ) யப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கைகள்

உ) சர்வதேச சங்கம் வலு வீழ்ந்தமை

ஊ) உடனடிக் காரணம்:

1939 செப்ரெம்பர் முதலாம் திகதி போலந்தை ஜேர்மன் தாக்கியதும் போலந்தைப் பாதுகாப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட பிரித்தானியாவும் பிரான்சும் செப்ரம்பர் மூன்றாம் திகதி ஜேர்மனிக்கு எதிராக போர்பிரகடனம் செய்தமை.

(33) முதலாம் உலகப்போரில் ஜேர்மனி தோல்வி அடைதமைக்கான காரணங்கள் எவை?

1) இத்தாலி முக் கூட்டு அணியைச் சேர்ந்தமை

2) பெல்ஜியம் ஆக்கிரமிக்கப்பட்டமை.

3) அமெரிக்கா முக்கூட்டு அணியைச் சேர்ந்தமை.

4) ஜேர்மனிய கடற்படையினர் கிளர்ச்சி செய்தமை.

– முற்றும் –

### துணுக்கு

வெள்ளை உடைக்கு வெண்மையை அளிக்கும் பதார்த்தங்கள் எவ்வாறு செயற்படுகின்றன?

வெளியேற்றும் பதார்த்தங்கள் துணியில் இருந்து நிறத்தை அகற்றுகின்றன. வெளியற்றும் பதார்த்தங்கள் ஒட்சியேற்றும் கருவிகளாகும், இவற்றிற்கு உதாரணமாக மில்ரன், வெளிற்றும்தூள் என்பவற்றை அறிவோம்.

வெண்மை அளிக்கும் பதார்த்தங்கள் முற்றிலும் வேறுபட்டவை. இப்பதார்த்தங்கள் துணியில் சேர்க்கப்பட்டால் அவற்றில் விழும் ஒளிக்கதிர்களில் உள்ள கட்புலனாகாத ஊதாக் கடந்த திருசியத்தை கட்புலனாகும் திருசியமாக, அதாவது நீலம் அல்லது நீலப்பச்சையாக மாற்றுவதால் சூழலுடன் ஒப்பிடுகையில் அதிக வெள்ளொளி துணியில் இருந்து தெறித்து கண்ணை அடைகிறது. இதனாலேயே நீலம்போட்ட துணிகள் பிரகாசிக்கின்றன.

கிறிஸ்பினி மைக்கல்

# இணையத்தையும் உலகளாவிய வலைப் பின்னலையும் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்

ஆக்கம்: R. S. ARAVINTH
FRANCE

தமிழில்: சி. ஜெயராஜன்
விஞ்ஞானபீடம்
யாழ் பல்கலைக்கழகம்

Dave Waldon, Craig Partridge and Ray Tomlinson ஆகிய மூன்று பொறியியலாளர்கள் 15 வருடங்கள் முன்னர் ARPANET என்னும் இணையத்தை உருவாக்கினர். இதுவே இன்றைய Internet என்னும் இணையத்தினது முன்னோடி. மூன்றாவது நபரே e-mail ல் உள்ள @ என்னும் சின்னத்தை பொறித்தவர்.

இணையத்தைப் பெற்று உலகளாவிய வலை அமைப்பை பயன்படுத்துவதற்கு, நீங்கள் கீழே தரப்பட்டுள்ள உபகரணங்களை கொண்டிருக்க வேண்டும்.

* கணனி (அண்மையில் வெளிவந்த கணனியை இயக்கும் தொகுதி (Operating and system) இயங்கக்கூடியது.
* Modem (Modulator and Demodulator) இரும அலையை சாதாரண உலக அலையாக (Analog) மாற்றுவதற்கும், உலக அலையை இரும அலையாக அதாவது மறுதலையாக மாற்றுவதற்கும் உதவும் உபகரணம்.
* தொலைபேசி இணைப்பு அல்லது குறுந்தூர வலையமைப்பு (Local Area Network) இணையத்துடன் கணனித்தொகுதியை இணைப்தற்கு பயன்படுகிறது.
* இணையத்திற்கான மென்பொருள் –சேவை வளங்குபவர் ஊடாக இணையத்தை பயன்படுத்துவதற்கு உதவுகின்றது.

குறிப்பு: குறுந்தூர வலையமைப்பினூடாக இணையத்துடன் இணைந்திருப்பின் Modem தேவையில்லை.

இரு அடிப்படைப் பிரிவுகளாக இணையத்தை பாவிக்கும் முறையைப் பிரிக்கலாம்.

1) வலையமைப்பு இணைப்பு

–பாடசாலை, வேலைத்தளம் போன்றனவற்றில் உள்ள குறுந்தூர வலையமைப்பினூடாக இணையத்தை பாவித்தல். இங்கு வலையமைப்பிற்கு என்று பொதுவாக இணைய இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும். இக் குறுந்தூர வலையமைப்பில் உள்ள எந்த பாவனையாளரும் இணையத்தைப் பயன்படுத்தலாம்.

2) தனியான இணைப்பு (Dial – Up Connection)

– Modem இனூடாக தொலைபேசி இணைப்பை பாவித்து கணனியானது இணையத்துடன் இணைக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவற்றை விட சில புதிய வகையான இணைப்பின் மூலம் விரைவானதும் ஒத்துப் போகக் கூடியதுமான இணைப்பினை ஏற்படுத்தலாம். அவ்வாறான சில இணைப்புகள்:

* கம்பியுடனான இணைப்பு (Cable Internet)

இவ்வகையான தொகுதிகள் உங்களது கணனியை தொலைக் காட்சிக்குப் பயன்படும் கம்பினூடாக (Cable TV) இணைக்கிறது. இவ்வகையான இணைப்புக்கள் Modem – தொலைபேசி இணைப்பிலும் குறைவான சேவைக்கட்டணத்துடன் வழங்கப்படும்.

* செய்மதி இணைப்பு (Satellite Connections)

இவ்வகையான இணைப்பு உங்களது கணனியை செய்மதியினூடாக இணையத்துடன் இணைக்கின்றது. இவ்வகையான இணைப்பு பெரிய அளவிலான இணையத் தளங்களை பெறுவதற்கு சிறந்த முறையான இணைப்பாக விளங்குகின்றது. ஆனால் Modem பாவித்துதான் செம்மதியுடன் இணைக் வேண்டும்.

* பரவலாக்கப்பட்ட இரும வலையமைப்புச் சேவை:

(Isdn – Jntegrated Service Digital Network)

ISDN ஆனது இரும தொலைபேசி (Digital Telephone) இணைப்பினூடாக கணனிகளை இணையத்துடன் இணைப்பதால் Modem தொலைபேசி இணைப்புடன் ஒப்பிடும் போது மிக வேகமான ஓர் இணைப்பாகும்.

* கம்பியில்லா இணைப்பு (Wireless Connection)

கைத் தொலைபேசி (Cellular Phones) தனி இரும உதவியாளர் (Personal Digital Assistant (PDAs) ) போன்ற கம்பியற்ற தொலை இணைப்புக்களானவை வரையான இணைய இணைப்புக்களை வழங்குகிறது. அதாவது மின் அஞ்சல், வரையறுக்கப்பட்ட உலகலாவிய வலை அமைப்பு போன்றனவற்றை வழங்குகின்றது.

* இணையத்தளத் தொலைக்காட்சி (Webtv)

இத் தொலைக்காட்சி 1996ம் ஆண்டு இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்டு பிரபல்யம் அடைந்த வருகின்றது. வழமையான தொலைக்காட்சியில் சில இணையத்திற்கு தேவையான பாகங்களை இணைத்து இணைய சேவையில் சேர்ந்து இணையத்தளம், மின் அஞ்சல் என்பனவற்றை பெறமுடியும்.

## இணையத்தில் உலாவருதல்

### இணையத்தை அடைதல்

நீங்கள் இணையக் கணக்கினை ஆரம்பித்து

[18 ம் பக்கம் பார்க்க]

# இன்ரநெற் தொடர்பான வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்

B. S. பசில் ஜெனதாஸ் B. B. A

France ல் இருந்து "What is Internet" என R. S. Aravinth எழுதியதை சி. ஜெயராஜன் தமிழில் 2000 தை மாத இதழ் தொடக்கம் தருகின்றார்.

அக் கட்டுரையின் சாராம்சத்தை, எமது அபிமான "பசில் மாஸ்ரர்" வினா விடையாக இங்கு தந்துள்ளார்.

பரீட்சை எழுதவுள்ளோருக்கு உபயோகமானது.

* இன்ரநெற் (Internet) (இணையம் என்றால் என்ன?

சர்வதேச வலைப்பின்னல் வேலைத்திட்டத்தையும் கணனிகளையும் பயன்படுத்தி சர்வதேச ரீதியாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் முறை இன்ரநெற் ஆகும்.

* இன்ரநெற் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு எவை தேவைப்படுகின்றன.

1. கணனி (486 அல்லது அதற்கு மேற்பட்ட Pentium Model)
2. மோடம் (Modem)
3. தொலைபேசி அல்லது செயற்கைக்கோள் இணைப்பு
4. தேவையான Software
5. இன்ரநெற் இணைப்பிற்கான அனுமதியும் விலாசமும்

* இன்ரநெற் கணனிகள் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு இணைக்கப்படுகின்றன.

1. கேபிள் மூலம்
   (நிலத்திற்கடியிலும் கடலுக்கடியிலும் அமைக்கப்பட்டுள்ள கேபிள்கள் மூலம்)
2. செயற்கைக்கோள்கள் மூலம்
   (வானில் வலம் வரும் செயற்கைகோள்களின் மூலம்)
3. கண்ணாடி நார் இழைகள் மூலம்
   (நீண்ட தூரத்திற்கு அதிகளவு தகவல்களை சமகாலத்தில் நகர்த்த உதவும்)

* இன்ரநெற் தொடர்பாடலில் மோடம் (Modem) வகிக்கும் பங்கு யாது?

ஓரு கணனியில் இருந்து கடத்திக்கும் பின் கடத்தியிலிருந்து மற்றைய கணனிக்கும் செய்தியை பரிமாற்ற உதவுகின்றது. அதாவது கணனி தகவல் பரிவர்த்தனைக்கு டிஜிற்றல் சிக்னல்களைப் (Digital signal) பயன்படுத்துகின்றன. ஆனால் இன்ரநெற் இணைப்பின் தகவல் கடத்திகளான கேபிள்கள், கண்ணாடி நார் இழைகள், செய்மதிகள் அனலொக் சிக்னல்களையே (Analogue Signal) கடத்தவல்லன. எனவே இன்ரநெற் இணைப்பில் Modem என்ற சாதனம் கணனிகளிடையே தகவல்களைப் பரிமாற்ற உதவுகின்றது. எப்படியெனில் கணனியினால் வெளியிடப்படும் டிஜிற்றல் சிக்னல்களை அனலொக் சிக்னல்களாக மாற்றி கடத்திக்கு அளிப்பதும் கடத்தியினால் கணனிக்கு கிடைக்கும் அனலொக் சிக்னல்களை டிஜிற்றல் சிக்னல்களாக கணனிக்கு அளித்தும் உதவுகின்றது.

* இன்ரநெற் தகவல் பரிமாற்றப் பொறியை உருவாக்கியவர் யார்? எப்போது?

அமெரிக்க கணனிப்பொறி விஞ்ஞானியான வின்ஸ்டன் சேர்ப்

1973 இல்

* இன்ரநெற்றிற்கு உரிமையாளர் யார்?

ஒருவரும் இல்லை.

* இன்ரநெற் இணைப்பிற்கு ஏன் முகவர்கள் தேவைப்படுகிறார்கள்?

இன்ரநெற் இணைப்பிற்கு உரிமையாளர் எவரும் இல்லை. என்றாலும் எவரும் நேரடியாக அதனுடன் தொடர்பை பெறமுடியாது. ஏனெனில் கேபிள்கள், கண்ணாடி நார் இழைகள், செயற்கைக்கோள்கள் என்பன இலவசமாகக் கிடைப்பதில்லை. இதனாலேயே இணைப்பை ஏற்படுத்திக் கொடுக்க முகவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

* இலங்கையில் இன்ரநெற் சேவைக்கு உதவும் முகவர் நிறுவனங்களிற்கு சில உதாரணங்கள் தருக.

1. Sri Lanka Tele com Ltd.
2. Lanka Internet Ltd.
3. Data com
4. Sintec

* இன்ரநெற் ஊடாக எவ்வடிவங்களில் தகவல்கள் பெறப்படலாம்?

1. எழுத்துக்களாக
2. படங்களாக
3. ஒலி வடிவில்
4. சலனப்படங்களாக

* இன்ரநெற்றில் பெறக்கூடிய தகவல்கள் யாவை?

பங்குச் சந்தை தகவல்கள் / வானிலைத் தகவல்கள் / நாணயமாற்று தகவல்கள் / வியாபாரத் தகவல்கள் / வர்த்தக விளம்பரங்கள் / கல்விசார் தகவல்கள்/ மருத்துவத் தகவல்கள் / சகல நாட்டு பத்திரிகைகள்/ சமயத்தகவல்கள் / ஏனையவை.

* இன்ரநெற் முறையின் பயன்கள் எவை?

1. கொள்வனவாளர் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.

[18ம் பக்கம் பார்க்க]

# வான சாஸ்திரம்

## சூரியன்

### பகுதி மூன்று

சூரியனது முக்கிய விபரங்கள்:

விட்டம் – 865, 400 மைல். பூமியிலும் பார்க்க 110 மடங்கு பெரியது.

தூரம் – பூமியிலிருந்து:
ஆகக் கூடியது – 95, 500, 000 மைல்
ஆகக் குறைந்தது – 91, 500 000 ,,
27

திணிவு – 22 × 10 தொன்
333, 400 மடங்கு பூமியிலும் பார்க்கக் கூடியது.

வெப்பம் – 9, 900° F
தன்னைத் தான் சுற்றும் காலம், மத்திய தரையில், பூமியின் காலத்தில் – 24 நாட்கள், 16 மணித்தியாலம்
23

சக்தி வெளிப்பாடு – 5 × 10 குதிரை சக்தி (Horse Power)

சதா பிராகாசிக்கும் சூரியன் ஓர் நாள் மங்கிப் போகிமா?

ஆம். தொடங்கியதெல்லாம் அற்றுப்போகும் என்ற விதிக்கமைய, ஒரு காலம் சூரியன் செயலற்றுத்தான் போகும்.

இதனது பிரமாண்டமான உருவத்திலுள் இருக்கும் பாரியளவு ஐதரசன் வாயு இன்னு மோர் 5 பிலியன் வருடங்கள் வரை எரிந்து சக்தியைப் பரப்பும்.

ஐதரசன் வாயு அற்றுப் போகும் நிலை தொடங்கும் போது, மிகப் பெரிதாக உருமாறி, அண்மையில் உள்ள கோள்களை, பூமியையும் சேர்த்து, தனக்குள் ஈர்த்துக் கொள்ளும்.

ஐதரசன் வாயு எரிந்து முடிந்ததும், சக்தி இல்லாது, இருண்ட, எரிந்த கரித்துண்டு போன்று, உயிரற்று, கடும் குளிர் கொண்ட எஞ்சிய கோள்கள் சகிதம், பிரபஞ்சத்தில் மௌனமாக, தனக்கே உரித்தான பாதையில் அசைந்து கொண்டிருக்கும்.

குறிப்பு: 09 வது இதழ் (கார்த்திகை/மார்கழி) யில் ''வைத்தியன் வரலாறு'' என்னும் கவிதைக் கட்டுரையை செல்வி சயந்தி குகதாசன், வேம்படி மகளிர், தந்ததன் பின்னர், இவ் ஆண்டு தை மாதம் தொடக்கம் தொடர்கின்றது...

தீ. சுவாலைச் சமுத்திரம். வெண் நிற அதி உஷ்ண, பிரகாசிக்கும் நெருப்பு வாயு 1000 கணக்காண மைல் உயரத்திற்கு சீறிப் பாய்ந்து, நெழிந்து மீள சூரியனது பரப்பினில் விழுகின்றது. இப் பாரிய, நம்ப முடியாத, கற்பனைக்கு எட்டாத விளைவு இடைவிடாது, மீண்டும் மீண்டும் தொடர்ந்து ஒவ் வொரு செக்கனும் நடைபெறுகின்றது. இது ஒரு நட்சத்திரம்: பூமியின் நட்சத்திரம்; சூரியன்.

சூரியன், ஏனைய நட்சத்திரங்களைப் போன்று, ஒரு மிகப் பெரிய வாயுப் பந்து. ''வாயு'' என்றதும் எமது கற்பனைக்கு வருவது 'காத்து' போன்ற மெலிதான விஷயம் தான், ஆனால் சூரியனில் ஈர்ப் பின் சக்தியால் வாயுவெகு நெருக்கமாக இழுக்கப் பட்டு, நெரிக்கப்பட்டு சூரியினது மேற் பரப்பில் திரவ நிலையில் உள்ளது. மேலும் சூரியனது மையப் பகுதி யில் இறுக்கமான நிலையில் வாயு உள்ளது. அவ் வளவு நெருக்கமாக ஈர்ப்புச் சக்தி இயங்குகின்றது. அநேகமாக, சூரியனது மையப் பகுதி எமது பூமுயில் உள்ள மிகப் பெரியதுமானதும், கடினமானதுமான கற்பாறையிலும் பார்க்க பெரியதும் கடினமானது மாக இருக்கும்.

வெகு நெருக்கமாக ஈர்க்கப்படும் போது சடப் பொருள் எம்மால் நினைக்க முடியாதளவுக்கு சூடா கின்றது. இந்த அணு உஷ்ண சக்தியை Thermonuclear Energy என்பர். இந்த அணு சக்தியே சூரி யனது மையப் பகுதியில் தொடர்ச்சியாக தாண்வ மாடுகின்றது. சூரியனது மேற் பரப்பு சீறிப் பாயும் வெப்பச் சமுத்திரமாக, அலை அலையாக 1, 000க் கணக்கான மைல்களுக்கு எழும்பி விழுகின்றது.

எமது உலகத்தில் நின்று நாம் 93 மிலியன் மைல் களுக்கு அப்பாலே உள்ள சூரியனது அகோர பிர காசத்தை வெறும் கண்களால் பார்க்க முடிவதில்லை. ஆனால், சூரியன் நட்சத்திரங்களுக்கில் மிகப் பெரிய தல்ல. இதனிலும் பார்க்க பெரிய நட்சத்திரங்கள் பிரபஞ்சத்தில் உள்ளன.

கடைக் கண்ணால் நாம் சூரியனைப் பார்க்கும் போது, பசுந்தான வட்ட வடிவான மேற் பரப்பைக் கொண்டதாகத் தோற்றும். இது ஒரு போலித் தோற்றமே!

மேற் பரப்பில் இருந்து, பற்ற வைத்த வாண வெடி போன்று கண் கூசும் பிரகாசத்துடன் எழும் பும் சுவாலை வாயு 120, 000 மைல் அகலமாக. 20, 000 மைல் உயரத்திற்கு சீறிப் பாய்ந்து மீண் டும் சூரியனில் விழும். இதே சமயம் வெவ்வேறு இடங்களிலும் இதே சீற்றம் உதித்து, மேலெழுந்து வீழ்ந்து மடியும். கற்பனை செய்து பாருங்களேன்!

சில சமயங்களில் சூரியனது மேற் பரப்பில் கறுப் புப் புள்ளிகள் தோன்றும். இவற்றை (Sunspots) சூரிய புள்ளிகள் என்பர். இவை சூரியனது காந்த சக்தியினால் ஏற்படுபவை. மிகப் பலமான காந்த சக்தி, சூரியனது மையப் பகுதியில் இருந்து உஷ்ண வாயுவை மேற் பரப்புக்கு வந்து சேரவிடாது தடுப் பதனால், அந்த குறிப்பிட்ட பகுதி ஏனைய பகுதி யிலும் பார்க்க பிரகாசத்தில் குறைவாக தோற்றுவ தனால் அப்பகுதி கறுப்புப் புள்ளியாக தோற்றும்.

[16 ம் பக்கம் பார்க்க]

# க. பொ. த. உயர் தர வாழ்க்கைத் தகைமை - விருத்திச் செய்திட்டம்

# G. C. E. 'A' Level Life - Competencies Project

by J. J. Michael

[சென்ற மாத இதழ் தொடர்]

செய்திட்டம் தொடர்பான தொடர்பாடல்கள் எழுத்து மூலமான கடிதங்களாக இருத்தல் விரும்பத்தக்கது. அக்கடிதங்களின் பிரதிகள், பதில் கடிதங்கள் போன்றவை காரியதரிசியின் கோவையில் பேணப்படல் வேண்டும். செய்திட்டம் நிறைவு செய்யப்பட்ட பின்னர் செய்திட்ட அறிக்கை (Project report) யை முறையாகத் தயாரித்து செய்திட்டக் குழுவிடம் சமர்பித்தல் வேண்டும்.

இவ் அறிக்கை செய்திட்ட பிரேரணைக்கு ஏற்றாற்போல் உருவாக்குதல் வேண்டும். இதில் காணப்பட வேண்டிய முக்கிய கூறுகளை பின்வருமாறு அமைத்துக் கொள்ளுங்கள்.

## செய்திட்ட அறிக்கை

1. செய்திட்ட தலைப்பு;-
2. செய்திட்டத்தை மேற்கொண்டோர்:- (குழு உறுப்பினர், குழு இலக்கம், பாடசாலை என்பன)
3. அறிமுகம்:-
4. குறிக்கோள்:-
5. சிறப்புக் குறிக்கோள்:-
6. செயற்படுத்திய விபரம்:-
7. நேரடிப் பயனாளிகள்:- (Target group – Beneficiaries)
8. காலவரையறை:- தொடக்க, முடிவுத்திகதி
9. உள்ளீடு:- (Input) பொருட்கள், மனிதவளம், ஆலோசகர்கள், நிதி போன்ற செய்திட்டத்தில் எதிர்பார்த்த வெளியீட்டை உருவாக்க தேவைப்பட்டவை.
10. தரவுகளும், தரவுப் பகுப்பாய்வும்:- ஆய்வுவகைச் செய்திட்ட அறிக்கையில் இப்பகுதி விரிவானதாக அமையும்.
11. வெளியீடு / முடிவு:- (Output / Result) செய்திட்டத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட முடிவு அல்லது முடிவுப்பொருள்.
12. நன்றி நவிலல்:- (Acknowledgements) உங்கள் செய்திட்டத்திற்க்கு உதவிய தனிநபர்/பொது நிறுவனங்களுக்கு நன்றி தெரிவிப்பு.
13. உசாத்துணைகள்;- (References) வழிகாட்டி நூல்கள், அறிக்கைகள், இவற்றை குறிப்பிடும் போது எழுத்தாளர், வெளியிடப்பட்ட ஆண்டு போன்ற விபரங்கள் குறிப்பிடல் வேண்டும்.
14. பின்னிணைப்பு:- (Appendix) தரவு சேகரிக்கப் பயன்படுத்திய / பயன்பட்ட உருப்படிகள் உ+ம் வினா கொத்துக்கள்.

இவ்வறிக்கையை ஒவ்வொருவரும் பிரதி செய்து உங்கள் கோவையில் பேணுவதுடன் ஒரு பிரதியை மேற்பார்வையாளருடாக இணைப்பாளருக்குக் கையளித்தல் வேண்டும்.

## செய்திட்ட மதிப்பீடு

உங்களது செய்திட்ட மதிப்பீட்டை மேற்பார்வையாளராக உள்ள ஆசிரியர் மேற்கொள்வார். உதவி வேண்டப்படுகையில் செய்திட்ட குழு உறுப்பினரையோ அல்லது வேறு வளவாளரையோ மதிப்பீட்டிற்காக நாடலாம்.

செய்திட்டத்தை ஆரம்பம் முதல் இறுதி வரை மேற்பார்வையாளர் பல்வேறு நிலைகளில் மதிப்பீடு செய்வார். இதற்கான அளவுகோல்கள் அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒவ்வொருவரும் தமது பொறுப்பை நிறைவேற்றும் விதம், களக் குறிப்பேடு, ஆவணக் கோவை, நேர வரையறைக்கு அமையச் செயற்படல் என்பவற்றை தொடராக மதிப்பீடு செய்வதுடன், உங்கள் திறன்களையும், செய்திட்ட அறிக்கையையும் ஈற்றுபெறுபேற்றையும் தனித்தனியே மதிப்பீடுசெய்வார்.

ஒவ்வொரு விடய மதிப்பீட்டிற்கும்
A — மிக நன்று
B — நன்று
C — திருப்திகரமானது
D — மேலும் விருத்தியடையவேண்டும்
E — போதுமானதல்ல

என்றவாறாக தீர்மானிக்கப்படும். இறுதியில் சான்றிதளிற்காக எல்லா விடய மதிப்பீடுகளினதும் திரள் பெறுபேறு பெறப்படும். தனித்தனி மாணவனுக்கும், குழுவுக்கும் திரள் பெறுபேற்றின் அடிப்படையில் சான்றிதழ் வழங்கப்படும்.

செய்திட்டம் தொடர்பாக இதுவரை அறிந்தவற்றை மனதில் கொண்டு செய்திட்டத்தை நீங்கள் மேற்கொண்டு நல்ல சான்றிதழ் பெற்றுக்கொள்ள எனது வாழ்த்துக்கள்.

நாம் அடுத்த ஆற்றலில் செய்திட்ட பிரேரணை ஒன்றையும், ஆய்வுச் செய்திட்ட அறிக்கை ஒன்றினையும் உதாரணம் மூலம் உருவாக்கியிருப்பதை எதிர் பாருங்கள்.

– முற்றும் –

# வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

## Resident Foreign Currency Accounts (R F C Accounts)

செ. நாகரட்ணம்
இலங்கை வங்கி
யாழ்ப்பாணம்.

RFC கணக்குகள் என சுருக்கமாகக் குறிப்பிடும் வதிவோர்வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (Resident Foreign Currency Ac) இலங்கையில் 1992 ம் ஆண்டு April மாதம் முதன் முதலில் அறிமுகம் செய்யப் பட்டது.

NRFC கணக்குகளை ஆரம்பித்து அதன் சலுகை கள், பலாபலன்களை அனுபவீக்க முடியவில்லையே என ஆதங்கப்பட்டோருக்கு RFC கணக்குகளின் அறி முகம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

சாதாரணமாக இலங்கை ரூபாக்களில் சேமிப்புக் கணக்குகளை வைத்திருப்போரிலும் பார்க்க வெளி நாட்டு நாணயங்களில் சேமிப்புக் கணக்குகளை வைத் திருப்போர் எவ்வித நன்மைகளை அடைகிறார்கள் என்பதை விரிவாக பின்வரும் பந்திகளில் பார்ப் போம்.

1. பண மாற்றீடு – Funds Transfer
2. வரிவிலக்குகள் – (Tax Relief)
3. கடன் வசதி – Credit Facility
4. நிதிசார் நன்மைகள் – (Financial Benifits)

### 1. பண மாற்றீடு (Funds Transfer

வெளிநாட்டு நாணயங்களில் சேமிப்போர் தங்கள் சேமிப்பை தம் விருப்பம்படி இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு செலாவணி கட்டுப்பாட்டாளரின் அனு மதி இன்றி எவ்வளவு தொகையையும், உலகின் எந்த மூலைக்கும் அனுப்பலாம் அல்லது தன்னோடு எடுத்துச் செல்லலாம். எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

### 2. வரிவிலக்குகள் (Tax Relief)

வெளி நாட்டு நாணயக் கணக்குகளில் சேமித்து வைத்திருக்கும் பணத்திற்கு சொத்து வரி (Weacth Tax) அறவிடப்படுவதில்லை. அதாவது RFC/NRFC கணக்குகளில் இருக்கும் நிலுவை உங்கள் சொத்தில் ஒரு பகுதியாக கணிக்கப்படுவதில்லை. ஆகவே இதில் இருந்து பெறப்படும் வட்டி வருமானமாக கணிக்கப் பட்டு வருமான வரி கட்ட வேண்டியது இல்லை. இலங்கை நாணயத்தில் வைத்திருக்கும் சேமிப்புக் கணக்கு நிலையான வைப்புக் கணக்குகளில் இருந்து வரும் வட்டிக்கு ஒரு தொகைக்கு மேல் நிறுத்தி வைக்கும் வரி (Withholding Tax) கழிக்கப்படும். ஆனால் வெளிநாட்டு நாணயக்கணக்கு களுக்கு அளிக்கப்படும் வட்டி எவ்வளவாக இருந்தா லும் நிறுத்திவைக்கப்படும். வரி கழிக்கப்படமாட்டது. சுருக்கமாகக் கூறுவோமாகில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு சகல வரிகளில் இருந்தும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

### 3. கடன் வசதி (Credit Facility)

இலங்கை நாணய சேமிப்பு அல்லது நிலையான வைப்புக் கணக்குகளில் இருக்கும் நிலுவையை பொறுப்பாகக் (Security) கொடுத்து எப்படி கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாமோ அத்தனை வசதிகளையும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்போர் பெற்றுக் கொள்ளலாம். எல்லா வற்றிற்கும் மேலாக வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போர் சர்வதேச கடன் அட்டையை (International Credit Card) தமது கணக்கில் இருக் கும் நிலுவைக்கு ஏற்ற வகையில் பெற்றுக்கொள்ள லாம். இன்ரநெற் (Internet) ஈ மெயில் (E - Mail) எனும் கணனி யுகத்தில் ஒரு சர்வதேச கடன் அட் டையின் தேவை அல்லது பிரயோசனம் எழுத்தில் வரைய முடியாததாகும். (Internet and International Credit Card) என்னும் கீபாருள் பற்றி ஒரு பெரிய தனிக்கட்டுரையே எழுதலாம்.)

### 4. நிதிசார் நன்மைகள் (Financial Benifits)

நிதிசார்பான நன்மைகள் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போருக்கு வருடாந்தம் பெறும் வட்டியிலும் பார்க்க வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி வளர்ச்சி அல்லது வேறு விதமாக சொல் வோமானால் இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி யிலேயே கூடுதலாக இருக்கிறது. உதாரணத்திற்கு முக்கிய வெளிநாட்டு நாணயமான டொலரை (USD) எடுப்போமானால், 99ம் ஆண்டு கொடுக்கப்பட்ட சராசரி வட்டி 5% வீதமாகும். அதேநேரம் இலங்கை ரூபாய்களில் இருந்த சேமிப்புக் கணக்குகளுக்கு 9% கொடுக்கப்பட்டது. ஆனால் இலங்கை நாணயத்திற் கெதிராக டொலரின் பெறுமான வளர்ச்சி 7% வீதத் திற்குமேல் இருந்திருக்கிறது. டொலரின் வட்டியான 5% வீதத்தோடு சேர்த்துப்பார்ப்போமானால் U S டொலரில் கணக்கு வைத்திருந்தவர் 12% மேல் பெறுகிறார். ஒரு குறிப்பிட்ட காலத்தில் டொலர் நாணயத்தின் பெறுமான வளர்ச்சி வீதத்தை Appr-eciation Rate and of U S Dollar) பின்வருமாறு கணிக் கலாம். 01-01-99ல் U S டொலரின் பெறுமதி 68/02 ஆகவும் 31-12-99ல் 72/90 ஆகவும் இலங்கை நாணயத்தில் இருந்தது, இந்த ஒரு வருடகாலத்தில் 4 ரூபா 88 சதம் கூடியுள்ளது. 68/02க்கு 4/88 கூடு மானால் 100/- ரூபாவிற்கு 7/17 கூடுகிறது அதா வது இக்காலப்பகுதியில் U S டொலரின் பெறுமானம் இலங்கை ரூபாய்க்கு எதிராக 7. 17% (வீதம்) வளர்ச்சி அடைந்திருக்கிறது இன்னும் ஒரு படி மேலே போவோமானால், 01-01-99 அன்று ஒருவர் 1000/- U S Dollar ரை தன்னுடைய R F C கணக்கிலும் 1000/- U S Dollar க்கு பெறுமதியான இலங்கை ரூபாய் 68020/- தனது இலங்கை ரூபாய் சேமிப்புக் கணக்கிலும் வரவு வைப்பாரேயானால் 31-12-99ல் அன்றி U S Doller 1000/- க்கு வட்டியான 50/- டொலருடன் 1050/- ஆகிறது, இலங்கை நாணயத் தில் இதன் பெறுமதி $1050 \times 71/90 = 76545/-$

[14ம் பக்கம் பார்க்க]

# Enlish Lesson - 05 – 03 – 2000

## 05ம் - பகுதி

சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் Watergate / வோரர்கேற் என்னும் சுவாரஸ்யமான வழக்கு அமெரிக்கா (U S A) வில் நடந்தேறியது.

Washington Post / வோஷிங்ரன் போஸ்ற் என்னும் பத்திரிகையினது இரு நிருபர்கள் வேவு பார்த்து, துப்புத் துலக்கி எழுதினர். இதனால் அமெரிக்க ஜனாதிபதி Richard Mulhouse Nixon / றிச்சட் மல்கவுஸ் நிக்ஸன் குற்றங்களை மூடி மறைக்க எத்தனித்துத் தோற்றதால், கண்ணீருடன், இராஜினமா செய்து பதவியிறங்கினார்.

01. Richard Nixon came from a not so rich middle class family of California.
றிச்சட் நிக்ஸன் கலிபோனியாவினது ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்,

02. He was a Lawyer who took part in politics.
அவர் ஒரு அரசியலில் பங்குபற்றிய சட்டத்தரணியாவர்.

03. In his earlier days with mud raking false propaganda he defeated a descent old man.
இவரது ஆரம்ப காலத்தில் ஓர் வயதான, பண்பானவரை கீழ்த்தரமான பொய்ப் பிரசாரத்தினால் தோற்கடித்தார்.

04. After the assassination of President John Kennedy the next presideet was Lyndon Johnson.
ஜனாதிபதி ஜோன் கெனடி கொல்லப்பட்டதும் லின்டன் ஜோன்சன் அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்றார்.

05. Lyndon was a very unpopular man.
லிண்டன் பலராலும் விரும்பத்தகாத மனிதன்.

06. His actions as president made people dislike his Democratic Party.
இவரது நடவடிக்கைகள் ஜனநாயக் கட்சியை மக்கள் வெறுக்கும்படி செய்தது.

07. Therefore it was not surprising Nixon won the next Presidential election as a Republican candidate.
ஆகவே, குடியரசுக் கட்சியினது வேட்பாளராக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிக்ஸன் வென்றது ஆச்சரியப்படுவதற்கில்லை.

08. He easily won the next election too.
அடுத்த தேர்தலிலும் அவர் இலகுவாக வென்றார்.

09. Though he knew his strength and weaknesses of his opponent party, he wanted to spy on them and collect information.
தனது பலத்தையும், எதிர் கட்சியின் பலவீனத்தையும் தெரிந்திருந்தாலும், அவர்களை இரகசியமாக வேவு பார்த்து தகவல்கள் சேகரிக்க விரும்பினார்.

10. He also had a recording system in his office room which he operated without the knowledge of others.
அத்துடன் எவருக்கும் தெரியாது தனது அலுவலக அறையில் இருந்த ஒலிப்பதிவு செய்யும் சாதனத்தை இயக்கி சம்பாஷணைகளைப் பதிவு செய்வார்.

11. Above all he freely used filthy words during discusslons in his office room.
எல்லாவற்றிற்கும் மேலாக தனது அலுவலக அறையினுள் உரையாடும் போது தூஷணை வார்த்தைகளை சரளமாக பாவிப்பார்.

12. To fullfil his wishes his men sent a team of burglers into Watergate Complex, which was the Headquarters of Democratic party.
அவரது விருப்பத்தை நிறைவேற்ற அவரது சகாக்கள் ஜனநாயகக் கட்சியினது தலைமையகம் இருந்த வோரகேற் கட்டிடத்திற்குள் திருட்டுத்தனமாக உட்புக ஓர் குழுவை அனுப்பினர்.

13. Some how or the other, they were caught by the Police, Their connection to Nixon was established. And Washinton post started reporting in detail.
ஏதோ விதமாக அவர்கள் பொலிசாரினால் பிடிபட்டனர். அவர்களுக்கும் நிக்ஸன் க்கும் இருந்த தொடர்பு உறுதி செய்யப்பட்டது. இவையெல்லாம் வோஷிங்ரன் போஸ்ற் பத்திரிகையில் முழு விபரத்துடன், தொடர்ச்சியாக, அம்பலப்படுத்தப்பட்டன.

14. At a Senate inquiry one Mr Butterfield by a slip of the tongue spoke about the recording device in Nixon's office.
ஓர் செனற் சபை விசாரணையின் போது பற்ரர் பீல்ட் என்பவர் வாய் தடுமாறி நிக்ஸனது அலுவலகத்தில் இருந்த ஒலிப்பதிவு சாதனத்தைக் குறிப்பிட்டார்.

15. Senate Committee called for the tapes from Presldent Nixon.
செனற் சபைக் குழு பதிவான நாடாக்களை ஜனாதிபதி நிக்ஸன் னிடம் தரும்படி கேட்டது.

16. But Nixon refused to surrender the tapes.
ஆனால் நாடாக்களை ஒப்படைக்க நிக்ஸன் மறுத்துவிட்டார்.

17. He claimed those tapes were presidential prlvate property.
அந் நாடாக்கள் ஜனாதிபதியின் பிரத்தியேக சொத்துக்கள் என அவர் உரிமை கோரினார்.

[13 ம் பக்கம் பார்க்க]

18. A case was filed in court. The Judge summoned the tapes.

நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதி ஒலி நாடாக்களை ஒப்படைக்கும் படி கட்டளையிட்டார்.

19. For nearly 18 months Nixon and his men tried their utmost to cover up the crime.

சுமார் 18 மாதங்களாக நிக்ஸனும் அவரது சகாக்களும் தங்களால் இயன்யளவு இக் குற் றத்தை மூடி மறைக்க முயன்றனர்.

20. The Washington Post, the Judge, the Public Proseutor and the Attorney general would not let him, But relentlessly pursued the normal Judicial processes.

பத்திரிகையும், நீதிபதியும், நீதி பரிபாலன அலு வலர்களும் நீதித் துறையினது வழமையான பாதையில் விடாப்பிடியாகச் சென்றனர்.

21. Having failed to cover up, he began to mls–use his Presidential powers to dismiss unco–operative judicial officials.

மூடிமறைப்பதில் தோல்வியுற்ற பின்னர், தனது ஜனாதிபதி பதவியினது பலத்தை துஷ்பிரயோ கம் செய்து தன்னுடன் ஒத்துழைக்காத நீதி பரிபாலன அலுவலர்களை பதவி நீக்கம் செய் யத் தொடங்கினார்.

22. His faithful secretary of 30 years, Miss rose, erased half an hour of recorded tape. When questioned by Court she pleaded accidental erasure.

இவரது 30 வருடகால, விசுவாசமான, மிஸ் றோஸ் என்னும் காரியதரிசி, அரை மணித்தி யால பதிவு செய்த ஒலி நாடாவை அழித்தார். கோர்ட்டினது கேள்விக்கு, தவறுதலாக அழி பட்டதென நீதிமன்றில் மன்றாடினார்.

23. In the meantime, his sharp tongued vice president, Spiro Agncw, resigned his post due to a financial scandal.

இதற்கிடையில், இவரது வாய்க் கூர்மையான உப ஜனாதிபதி, ஸ்பிறோ அக்கினியூ, ஊழல் சம்பந்தமாக தனது பதவியை இராஜினமாச் செய்தார்.

24. Nixon appointed Senator Gcrald Ford as his next vice president.

ஜெறல்ட் போட் என்னும் சென்ரர் ஐ தனது உப ஜனாதிப்தியாக நியமித்தார் நிக்ஸன்.

25. Finaly when the noose became tighter round his neck, he resigned as president and left the White House in a helicopter with his family.

இறுதியாக கழுத்தைச் சுற்றிய சுருக்கு இறுக்கி யதும் தனது ஜனாதிபதி பதவியை விட்டு, தனது குடும்பத்தினருடன் ஓர் ஹெலிகொப்ரர் மூலம் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினார்.

26. He refused to acccpt any telephone calls, on the last day, from his faithful assistants.

கடைசி நாளில், தனது விசுவாசமான உதவியா ளர்களிடம் இருந்து வந்த ரெலிபோன் தொடர்பு களை ஏற்க மறுத்துவிட்டார்.

27. He refused to speak to his special assistant Haldeman either in person or on the phone.

தனது விசேட உதவியாளாரன ஹல்டமன் என் பவரோடு நேரடியாகவோ, ரெலிபோன் மூல மோ பேச மறுத்துவிட்டார். (நன்றி கெட்ட தனம்... தோன்றுகின்றது தானே!)

28. Altogether 13 of his assistants were given jail sentenees.

எல்லாமாக பெரும் பதவிகள் வகித்த இவரது 13 உதவியாளர்களான சகாக்கள் பல்வேறு குற் றங்களுக்காக சிறைத்தண்டனைக் குள்ளானார் கள்.

29. Nixon escaped prison life because his succ–essor, Gerald Ford, granted him full pardon

நிக்ஸனது ஜனாதிபதி வேற்றிடத்துக்கு வந்த ஜெறால்ட் போட முழு மன்னிப்பு வளங்கிய தால் நிக்ஸன் சிறை வாசத்திலிருந்து தப்பினார்

30. What fate made Nioxn suffer this disgrace at the end of his career?

அவரது கடைசிக் காலத்தில், இவ்வளவு அவமானமான விதியை ஏன் சந்திக்க வேண்டி வந்தது?

31. Could it be that it was the sin he commited at the beginning of his career, when he defeated an old descent man by using dirty tactics?

அவரது வாழ்க்கையின் தொடக்க காலத்தில், ஓர் வயதான பண்பான அரசியல்வாதியை கீழ்த் தரமான செயல்களினால் தோற்கடித்தாரே, அப் பாவமாக இருக்குமோ?!

32. The rise and fall of Richard Nixon is a les–son for us, For the higher they are, harder they fall.

றிச்சட் நிக்ஸனது வளர்ச்சியும் வீழ்ச்சியும் எமக்கு ஓர் பாடமாகும். எவ்வளவு உயரத்தில் உள்ள னரோ, அவ்வளவு வேகமாக விழுவர்; [தின்மை செய்தால்]

[அடுத்த மாத சித்திரை இதழில் அணுக் குண்டினது கதை தொடங்குகின்றது. அணு குண்டு சம்பந்தமான தகவல்கள் இருந்தால் அவற்றை, எம் மூலம், ஏனைய வாசகர்களு டன் பகிருங்களேன்!

## வதிவோர் வெளிநாட்டு...

[11 ம் பக்கத் தொடர்ச்சி]

அதே நேரம் இலங்கை நாணய சேமிப்புக் கணக்கில் இட்ட 6802O/– ரூபாவுக்கும் 9% படி 74121/– முதலும் வட்டியுமாக வருகிறது. அதாவது RFC / NRFC கணக்குகளில் சேமித்தவர் 2403/– ரூபா அதிகமாக பெறுகிறார்.

மேற்படி கணிப்பீடு உதாரணமாக சரியான தரவுகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது. இது மற்ற வெளிநாட்டு நாணயங்களுக்கும் பொருந்தும். இருந்தாலும் வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி தொடர்ந்து இவ்வாறு அதிகரிக்குமா என்னும் கேள்வி எம்முன் நிற்கிறது. இதுவரை அதிகரித்திருக்கிறது, எதிர்காலத்திலும் அதிகரிக்கும் என்பதே பொருளாதார வல்லுனர்களின் கணிப்பாகும் 77ம் ஆண்டு நவம்பர் மாதம் திறந்த பொருளாதாரக் கொள்கை வெளியிடப்பட்டு இலங்கை ரூபா மிதக்க விடப்பட்ட போது. ஒரு US டொலரின் பெறுமதி 15 / 25 ஆகவும், ஸ்ரேலிங் பவுணின் பெறுமதி 28 / 50 ஆகவும் இருந்தது. இன்று எவ்வளவுக்கு அவற்றின் பெறுமதி உயர்ந்திருக்கிறது என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்போர் அடையும் நன்மைகளை மேலே பார்த்தோம். வெளிநாடுகளில் கூடுகலாக உறவினர்களையும், நண்பர்களையும் கொண்டிருக்கும் குடா நாட்டு மக்களுக்கு RFC கணக்குகள் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்பதில் ஐயம் இல்லை. RFC கணக்குகளை USD, UKL, CAD, EURO, SID, AUD ஆகிய நாணயங்களில் திறக்கலாம். குடாநாட்டு மக்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறப்பதில் காட்டும் ஆர்வம் இதன் முக்கியத்துவத்தை உணர போதுமானதாகும்.

– மூற்றும் –

---

* மிகவேகமானது – புதன் (Mercury)
* சூரியனுக்கு மிக அண்மையிலுள்ளது – புதன் (Mercury)
* பூமிக்கு மிக அண்மையிலுள்ளது – வெள்ளி (Venus)
* சூரியனுக்கு மிகத்தொலைவிலுள்ளது – புளூட்டோ (Pluto)
* பிரகாசமானது – வெள்ளி (Venus)

— அளவெட்டி வாதவூரர் —


# ரவி களஞ்சியம்

கண்டி வீதி,
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் முன்பாக

உங்கள் தேவைகளுக்கேற்ப அழகுசாதனப் பொருட்களும்,
அன்றாட பாவனைப் பொருட்களும்,
அன்பளிப்புப் பொருட்களும்

குளிர்பான வகைகளில்

- ஐஸ்கிறீம்
- யோகட்
- பட்டர்
- ஐஸ்சர்பத்
- ஐஸ் பூஸ்

மொத்தமாகவும் சில்லறையாகவும்;
பெற்றுக் கொள்ளுங்கள்

பூரண உரிமையாளர்
**A. ரவீந்திரன்**
கண்டி வீதி, அரியாலை.

# காப்புறுதி

அ. கிறிஸ்ரி
யாழ் காப்புறுதி கூட்டுத்தாபனம்

மாசி மாதம் தொடக்கம்: A/L மாணர்களுக்கான...

## ஆயுட்காப்புறுதியை ஏற்படுத்தும் முறை

### 01. முன்மொழிவுப்படிவம் கையளிப்பு

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்த விரும்புபவர் ஆயுள் தொடர்பான பெயர், முகவரி, ஆயுளின் சௌக்கியநிலை போன்ற விபரங்களை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்ப வடிவில் கையளிக்கின்ற ஒரு செயற்பாட்டினையே இது குறித்து நிற்கும். இதனை கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலே அல்லது பிரதேச மாவட்ட அலுவலகத்திலே நேரடியாக கையளிக்கின்ற ஓர் முறையினைக் கருதும்.

### 02. மருத்துவர் சான்றிதழ் பெறல்

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை ஏற்படுத்த விரும்புபவர் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தினால் சட்ட ரீதியான வைத்தியர் ஒருவரிடம் முழுமையாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும்.

### 03. முன்மொழிவுப் படிவம் கையேற்றல்

முன்மொழிவுப் படிவமும், மருத்துவச் சான்றிதழும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பு குறிப்பிடப்பட்ட தகவல்கள் கூட்டுத்தாபனத்திற்கு திருப்தியினை ஏற்படுத்துகின்ற வேளையில் சட்டரீதியாக முன்மொழிவுப் படிவத்தினைக் கையேற்று காப்புறுதி ஒப்பந்தம் வழங்கப்படும். இவ்வாறு ஒப்பந்தத்தினை கையளிக்கின்ற வேளையில் கட்டணம் செலுத்தப்படும் முறை மாதாந்தக் கட்டணத்தின் அளவு நட்டஈடு வழங்கப்படும் முறை போன்றவை பற்றி காப்புறுதி செய்தோனுக்கு ஆலோசனை வழங்கப்படும்.

## ஆயுட் காப்புறுதிக்கான கட்டணத்தை தீர்மானிக்கும் காரணிகள்

01. ஒப்பத்தக்காலம்
02. ஒப்பந்தத்தொகை
03. காப்புறுதி செய்தோனின் வயது
04 சேதத்தின் அளவு

## செயலற்றுப்போன ஆயுட்காப்புறுதியினைப் புதுப்பித்தல்

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வலியுறுத்தலுக்கு அமைய காப்புறுதி செய்தோன் ஒழுங்கான தவணைக்கட்டணம் செலுத்தப்படாத வேளையில் ஏற்கனவே ஏற்படுத்திக்கொண்ட ஆயுட் காப்புறுதி ஒப்பந்தம் செயலற்றுப் போய்விடும். அந்த சந்தர்ப்பத்தில் பின்வரும் அடிப்படையில் காப்புறுதியினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

1. தவணைக் கட்டணம் செலுத்தப்படாத காலம் 6 மாதத்திற்கு குறைவாக இருப்பின் இது வரை காலமும் செலுத்தப்படாத கட்டணத்தினையும் அதற்கான வட்டியையும் சேர்த்து ஒரே முறையில் செலுத்தல் வேண்டும்.

2. தவணைக் கட்டணம் செலுத்தப்படாத காலம் 6 மாதத்திற்கு மேலும் 24 மாதத்திற்கு குறைவாகவும் இருப்பின் இதுவரை காலமும் செலுத்தப்படாத கட்டணத்தினையும் அதற்கான வட்டியினையும் சேர்த்து பகுதி பகுதியாக செலுத்த வேண்டும்,

## கட்டணம் செலுத்துவதனை பூரணமாக நிறுத்திக்கொள்ளுதல்

செயலற்றுப்போன ஓர் ஆயுட்காப்புறுதியினை புதுப்பிக்க விரும்பாத ஒருவர் பூரணமாக கட்டணம் செலுத்துவதனை நிறுத்திக் கொள்ளலாம். இவ்வாறு ஆயுள் காப்புறுதி ஒன்றினை நிறுத்தும் வேளையில் காப்புறுதி செய்தோனுக்கு ஏற்படுகின்ற பணரீதியான இழப்பினைக் குறைத்துக் கொள்வதற்காக பின்வரும் இரண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

### 01. ஒப்படை பெறுமானம் பெறல்

ஆயுள் காப்புறுதியினை நிறுத்திக் கொள்ள விரும்பும் ஒருவர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் தாம் இதுவரை காலமும் செலுத்திய கட்டணத்தில் ஒருபகுதியினை மாத்திரம் திரும்பப் பெற்றுக் கொள்கின்ற ஓர் முறையினையே இது கருதும். இங்கும் இதுவரை காலமும் செலுத்திய கட்டணத்தில் இருந்து ஒப்பந்தச் செலவுகள் கழிக்கப்பட்டு தேறிய மீதி ஒப்படைப் பெறுமானமாக வழங்கப்படும்.

### 02. இறுத்த அல்லது செலுத்திய காப்புறுதியாக மாற்றுதல்

ஒழுங்காக கட்டணம் செலுத்தப்படாத வேளையில் தமது சொந்த விருப்பத்தின் பெயரில் இறுத்த அல்லது செலுத்திய காப்புறுதியாக மாற்றிக்கொள்ளலாம். தாம் இதுவரை காலமும் செலுத்திய கட்டணத்திற்கேற்ப ஒப்பந்தத் தொகையினை வரையறுத்துக் கொள்கின்ற ஓர் செயற்பாட்டினையே இது குறித்து நிற்கும். இங்கு ஒப்பப்தக் காலம் முடிவடைகின்ற வேளையில் காப்புறுதி ஒப்பந்தத்தினை ஒப்படைத்து நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஆயுட் காப்புறுதியில் கடன் பெறுமானம்

ஒழுங்காக கட்டணத்தைச் செலுத்திய ஒருவர் தமது சொந்த விருப்பத்தின் பெயரில் ஆயுட்காப்புறுதி ஒப்பந்தத்தினை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு ஈடாக வழங்கி இதுவரை காலமும் செலுத்திய கட்டணத்தில் ஒரு பகுதியினைக் கடனாகப் பெற்றுக் கொள்ளுகின்ற ஓர் முறையினையே இது குறித்து நிற்கும். இத்தன்படி ஆயுட்காப்புறுதி ஒப்பந்

[17ம் பக்கம் பார்க்க]

## வானசாஸ்திரம்...

[09 ம் பக்கத் தொடர்ச்சி]

இக் கறுப்புப் புள்ளிகள் சில நாட்கள் அல்லது சில மாதங்கள் நிலைத்து நின்று, பின்னர் மறைந்து விடும். சில சமயங்களில், இக் கறுப்புப் புள்ளிக் கூட்டங்களுக்கு அண்மையில் பெரும் அதிர்வெடி (Explosion) நடைபெறும். இதனை சூரிய சுடர் (Solar Flare) என்பர். இவை சில நிமிடங்களில் மறைந்து விடும். இவ் இரண்டு விளைவுகளும் பூமியினது காந்த அலைகளை பாதிப்பதால்; றேடியோ, ரீ வீ ஆகிய வற்றின் அலைகளில் பாதிப்புகள் ஏற்படும்.

சூரியனைச் சதா சுற்றிக் கொண்டிருக்கும் கோள்கள் உள்ளன. இவை சூரியனிலிருந்து வெவ்வேறு தூரங்களிலும், தத்தமது பிரத்தியேக வேகத்திலும், சூரியனை ஓர் ''நீள் வட்ட'' வடிவத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இப்படிச் சுற்றும் பாதையை ''Orbit'' என அழைப்பர். இப் பெயர் சூரியனது குடும்பத்தைச் சேர்ந்த கோள்களுக்கு மட்டும் அன்றி, பூமியை வலம் வரும் எமது ''செயற்கை விண்கலன்'' களின் பாதைகளுக்கும் பொருந்தும்.

சூரியனது குடும்பத்தில் 09 கோள்கள் உள்ளன. இவற்றை Planets என அழைப்பர். சூரியனுக்கு மிக அண்மையில் இருப்பது: புதன் / Mercury; அடுத்த தாக: வெள்ளி, சுக்கிரன் / Venus; 3வது எமது பூமி / Earth; 4வது செவ்வாய் / Mars; 5வது குரு வியாழன் / Jupiter; 6வது சனி / Saturn; 7வது யுறேனஸ் Uranus; 8வது நெப்ரியூன் / Neptune; கடைசி 9வது புளூரோ / Pluto இவ் 09 நவக்கிரகங்களும், தத்தமது சந்திரன்களுடன் சூரியனை வலம் வருகின்றன.

இக் கோள்கள் சூரியனிலும் பார்க்க மிக மிகச் சிறியவை. இவற்றிற் சில இரவில் மின்னுபவை போல எமக்குத் தோன்றினாலும், அவை சூரியனைப் போன்று தமது சொந்த வெளிச்சத்தால் பிரகாசிப்பவை அல்ல. சூரியனில் இருந்து பரவும் வெளிச்சத்தினது ஒளியினாலேயே அப்படி மின்னொழிக்கின்றன. Reflected Light.

பிரபஞ்சத்தில் உள்ள அத்தனையும் தம்மைத் தாமே ஓர் பம்பரம் போல சுற்றுகின்றன. இப்படிச் சுற்ற எடுக்கும் காலம் அக்கோளின் ''ஒரு நாள்''

இப்படியே தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனை ஒரு முறை, தனது பிரத்தியேகமான பாதையில் (Orcit), வலம் வர எடுக்கும் காலத்தை அக் கோளினது ''ஒரு வருடம்'' எனக் கூறுவர்.

இப்படியே சுற்றும் கோள்கள் சுயமாக தமது விசைக் கேற்ப, நேர் கோட்டில் செல்லது சொல்லுக் கேட்கும் பிள்ளை போல, ஒரே பாதையில், கோடிக்கணக்கான வருட காலங்களாக, சூரியனை சுற்றிக் கொண்டே வருகின்றன.

இதன் காரணம் ஒன்றே ஒன்று தான்! Sir Issac Newton, அப்பீள் பழம் விழுவதைத் அவதானித்தால், கண்டுபிடித்த ''ஈர்ப்புச் சக்தி'' யே (Force of Gravity) தான் காரணம். ஒன்றை ஒன்று இழுக்கின்றன. சகல நட்சத்திரங்களும், கோள்களும், சந்திரன்களும் ஈர்ப்புச் சக்தியால் இழுபடுதால், தனித்துப் பிரிந்து, தன்னிச்சையாக பிரிந்து செல்ல முடியாது இழுக்கப்பட்டுக் கொண்டே சுழன்று கொண்டு தத்தமது பாதையில், தமக்குரிய வேகத்தில் வலம் வருகின்றன. இந்த ஈர்ப்புச் சக்தி உள்ளவரை சகல கோள்களும், அவைகளின் சந்திரன்களும், கோடான கோடி நட்சத்திரன்களும் பிரபஞ்சத்தில் தம்மைத் தாமே சுற்றிக் கொண்டு தத்தமது குடும்பத்தினது நட்ஷத்திரத்தை விடாது வலம் வந்து கொண்டிருக்கும்.

அப்போ, எமது சூரியனிலிருந்து அளவான தூரத்தில் எமது பூமி இருப்பதால் அதில் உயிர் உண்டாகசாத்தியக் கூறுகள் இருந்தன. சூரியனுக்கு அண்மையென்றால் வெப்பம், தூரம் என்றால் குளிர் வெப்பமும், குளிரும் அளவாக இல்லாது கூடியோ. குறைந்தோ இருந்தால் உயிர் உருவாகவும், வாழவும் முடியாது.

அப்படியானால், நட்சத்திரமான எமது சூரியனுக்கு கோள்கள் இருந்து, அளவான தூரத்தில் எமது பூமி இருந்ததால் பூமியில் உயிர் உருவாகியது போன்று; வெவ்வேறு நட்சத்திரங்களுக்கும் கோள்கள் இருக்கக் கூடும், அக் கோள்களில் ஒன்று அளவான தூரத்தில் அமைந்து வலம் வரக்கூடும், ஆகவே அக் கோளில் கணக்கான வெப்பமும், குளிரும் இருக்க வேண்டும். இப்படியான சீரான ஒதோஷண நிலை இருப்பதால் உயிர் உண்டாயிருக்கும், இவ் உயிர்கள் காலப்போக்கில் பரிமாண மாற்றங்களால் பகுத்தறிவு கொண்ட (எம்மைப் போன்ற) ஜீவன்களாக வாழக் கூடும் என மனதில் எண்ணம் தோன்றுகின்றதே!

இவ் எண்ணம் சகல சமயங்களினது தத்துவங்களுக்கும் முரணானதென்றபடியால், தொடர்ந்து நாம் சூரியனைக் கவனிப்போம்.

சூரியனும் தன்னைத் தான் சுற்றுகின்றது. அது ஓர் வட்டம் சுற்ற பூமியின் ஒரு மாத காலம் ஆகின்றது. அத்துடன், தனது குடும்ப கோள்கள், அவற்றின் சந்திரன்கள், புடைசூழ மிகப் பாரிய பாதை (Orbit) ஒன்றில் எமது பால் வீதி மண்டலத்தின் மத்தியில் சுழன்று வருகின்றது. [Galaxy என்றால் என்னவென்பதை ஏற்கனவே ''ஆற்றல்'' ல் விளக்கியுள்ளோம்] சூரியன் Galaxy யில் ஓர் வட்டம் வர, உலக வருடக் கணக்கில் 200 மிலியன் (2,000 லட்ஷம்) வருடங்கள் எடுக்கின்றது.

இந்த நட்சத்திரமான சூரியன் எவ்வாறு உருவாகியது? ஓர் பிரமாண்டமான அதிர்வெடி (Explosion) தூசுகளையும் (Dust), வாயுக்களையும் (Gas) முகில்கள் போல பரப்பியது. பலவிதமான இரசாயன பொருட்கள் அம் முகில்களில் இருந்தாலும், ஐதரசன் (Hydrogen) வாயுவே கூடுதலாக இருந்தது. இம் முகில்கள் பிரபஞ்சத்தில் நகரும் போது வேறு முகில்களுடன் கலந்து மிகப் பெரிய தூசும், வாயுவும் கலந்த முகிலாக வளர்ந்தது.

[21 ம் பக்கம் பார்க்க]

## இன்ரநெற் தொடர்பான...

[08ம் பக்கத் தொடர்ச்சி]

2. போட்டியாளர் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
3. தனது பொருள் பற்றிய பூரண தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
4. உடனடியாகவும் குறைந்த செலவிலும் சர்வதேச சந்தையில் விளம்பரம் செய்யலாம்.
5. கல்வி/மருத்துவம்/பங்குச்சந்தை போன்ற பல்வேறு தகவல்களைப் பெறலாம்.

* இன்ரநெற்றின் பிரதிகூலங்கள் யாவை?

1. இராணுவ யுத்த இரகசியத் தகவல்கள் வெளிப்பட வழிவகுத்தல்.
2. பயங்கரவாதக் குழுக்கள் பிரச்சாரத்துக்கு பயன்படுத்துவதால் நாட்டின் அரசுக்கு பாதிப்பாக அமையும்.
3. சர்வதேச போதைப் பொருள் வியாபாரிகளுக்கு சாதகமாக தகவல் பரிமாற உதவல்.
4. சிலர் ஆபாசத் தகவல்களைப் பயன்படுத்துவதால் ஒழுக்கப் பிரச்சனைக்கு வழிவகுத்தல்.

* மின் அஞ்சல் / இலத்திரனியல் அஞ்சல் (Electronic Mail, E – Mail) என்றால் என்ன?

சர்வதேச வலைப்பின்னல் வேலைத் திட்டத்தையும் கணனிகளையும் பயன்படுத்தி கடிதங்களைப் பரிமாறிக் கொள்ளும் முறை மின் அஞ்சல் அல்லது ஈமெயில் ஆகும்.

* தொடர்பு கொள்ளலில் எவ்வாறு இலத்திரனியல் அஞ்சல் பயன்படுகின்றன?

இலத்திரனியல் அஞ்சல் வசதிகளுக்கென ஒதுக்கப்பட்ட இலக்கங்களை பயன்படுத்த வேண்டும். தகவல் அனுப்புபவர் பெறுபவரின் இலக்கத்தையும் தகவல் பெறுபவர் அனுப்புபவரின் இலத்தையும் தெரிந்திருக்கவேண்டும். தொலைபேசியுடன் இணைக்கப்பட்ட கணனிகளின் திரைகள் பயன்படுத்தத் தயார் செய்திருத்தல் வேண்டும். தகவல் பெற வேண்டிய வரது இலக்கத்தை அழுத்தி அனுப்புவர் தனது கணனியில் அழுத்தி பின்னர் தகவலையும் அழுத்த வேண்டும். இத்தகவல் அதை பெற வேண்டியவரது கணனியில் பொறிக்கப்படும்.

* இலத்திரனியல் அஞ்சலில் காணப்படும் நன்மைகள் யாவை?

1. ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த செலவு (ரெலக்ஸ், பாக்ஸ் போன்றவற்றை விட)
2. மிக விரைவாக தகவல்களைப் பரிமாற்றலாம்.
3. ஒரே தகவலை ஒரே தடவையில் பல கணனிகளுக்கு அனுப்பலாம்
4. உலகின் எந்தப் பகுதிக்கும் தகவல்களை அனுப்ப பெறமுடிதல்.
5. தகவலின் இரகசியத்தன்மையை ஓரளவு பேணலாம்.

* இலத்திரனியல் அஞ்சல் தகவல்களின் இரகசியத் தன்மையை பேணுவதில் பக்ஸ்ஸை விடவும் பயன்மிக்கது – விளக்குக?

பக்ஸ் மூலம் அனுப்பப்படும் தகவலை யாரும் பெற்றுக் கொள்ள முடியும். இலத்திரன் அஞ்சல் தகவல்களை இயந்திரத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் நபருக்கு அல்லது நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இலத்திரன் அஞ்சல் இலக்கம் (இரகசிய இலக்கம்) மூலம் மட்டுமே தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

[அடுத்த மாத இதழில் தொடரும்]

## காப்புறுதி...

[15 ம் பக்கத் தொடர்ச்சி]

தத்தில் ஒப்படைப் பெறுமானத்தில் 90% கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஆயுட் காப்புறுதியில் பங்கு இலாபம்

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் நீண்ட காலத்தில் முதிரும் தன்மை உடையது என்பதனால் அவற்றின் ஊடாக பெறப்படுகின்ற கட்டணங்கள் முழுவதும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் முதலீடு செய்யப்படும். பின்னர் அவற்றின் ஊடாக பெறப்படுகின்ற முதலீட்டு வருமானம் முதலீட்டுக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதில் வரவு வைக்கப்படும். அவ்வாறு சூறிப்பிட்ட வீதம் ஒப்பந்தத் தொகையுடன் பங்கு இலாபம் என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது.

அடுத்த மாதம் ''ஆயுட் காப்புறுதியின் வகை'' களை ஆராய்வோம்.

## குறிப்பு

அதிபர், அல்லது வகுப்பு ஆசிரியர் / ஆசிரியை, அல்லது ''ஆற்றல் மாணவர் வட்டம்'' மூலம் எமக்குக் கிடைக்கும் ஆக்கங்கள் கவனிக்கப்படும்.

பத்திரிகைக்கு எழுதும் விதிமுறைகளை பிரசுரித்துள்ளோம். இவற்றைப் பேணாதவைகளை பிரசுரிக்கப்படமாட்டா.

எம்மிடம் இருந்து பதில் எதிர்பார்ப்போர், ஆக்கங்கள் அனுப்புவோர் தவறாது சுய விலாசமிட்ட தபால் முத்திரை ஒட்டிய கடித உறை அனுப்ப வேண்டும்.

இலாபம் இல்லாது நாம் ''ஆற்றல்'' உங்களுக்கு வழங்கும் போது, மேலும் தபால் செலவை நாம் பொறுப்பது இயலாத காரியமாகும்.

ஆசிரியர்

## இணையத்தையும்...

[07 ம் பக்கத் தொடர்ச்சி]

இருப்பின், உங்களது கணனியினூடாக இணையத்தில் எந்நேரமும் உலா வரலாம். அவ்வாறு உலா வருவ தற்கு கீழே தரப்பட்டுள்ள நடைமுறைகளை செயற் படுத்தல் வேண்டும்.

1) கணனியை இயக்க (Start) வைத்து, Modem ஐத் தொழிற்படச் செய்து (Switch on) அதனைத் தொலைபேசி இணைப்புடன் இணைக்க வேண்டும்.

2) இணையத்திற்கான மென்பொருளை ஆரம் பிக்க (Open) வேண்டும்.

3) இணைப்பை தொடங்கும் போது பல செயற் பாடுகளிற்கு உரிய செயலொழுங்குகள் வெளியிடப் படும். அவற்றிற்கான உள்ளீடுகளை கொடுக்க வேண் டும். இச் செயற்பாடுகளிற்கு ஏறத்தாழ 15 தொடக் கம் 30 செக்கன்கள் வரையிலான நேரம் எடுக்கும்.

4) ஒருவர் மேற்படி நடைமுறைகளை எல்லாம் சீராக செய்து முடித்திருப்பின் அவர் தனக்குரிய இணைய தேடலினை அதாவது களத்தேடலினை செய்து இணையத்தைப் பயன்படுத்தலாம்.

## இணையத்தளங்களை அடையும் முறை

இப்பொழுது நீங்கள் இணையத் தளத்தை (Web Site) பெற்றுவிட்டீர்கள் என்று கருத்தில்க் கொண்டு எவ்வாறு நீங்கள் அறிந்த இணையத் தளங்களை பார்வையிடலாம் என்று பார்ப்போம். இவற்றிற்கு பல்வேறுபட்ட முறைகள் உள்ளன.

* இணையத்தில் உலாவருவதற்கு என்று தோன் றும் வெளியீட்டில் (Display) உள்ள URL முகவரி இடுவதற்கு என்றுள்ள இடத்தில் URL முகவரியை இடுவதன் மூலம் இணையத்தை அடைதல்.

கீழே தரப்பட்டுள்ளவற்றை அவ்வொழுங்கிலோ செய்வதன் மூலம் இணையத்தில் ஈடுபடலாம்.

1) URL ற்கான இடத்தில்
''h: // WWW yahoo. com'' இட்டு வைத்து கொள்ள வேண்டும்.

2) தட்டுப் பலகையில் (Key board) உள்ள Enter or Return சாவியை (Key) அழுத்த வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட நடைமுறையின் மூலம் நீங் கள் மிகவும் பிரபல்யமான ''yahoo'' என்ற இணை யத்தளத்தை அடையலாம். இத்தளமானது வெறுமை யான தேடுவதற்கான படிவத்துடன் வகை வகை யான தளங்களிற்கான நேரடி இணைப்பையும் கொண் டிருக்கும்.

3) நேரடி இணைப்பிற்கான பகுதியில் உங்க ளிற்கு தேவையான வகையில் Click பண்ணும்போது அவ்வகையை சேர்ந்த தளங்களிற்கான முகவரிகள் அட்டவணையாக ஒரு சில நிமிடங்களில் தோன்றும். இவ்வாறு தோன்றும் போதும் உபவகையான தளங் களிற்கான இணைப்பும் தோன்றலாம். இவ்வாறு தோன்றும் முகவரிகளிலோ அல்லது உபவகையிலோ உள்ள நேரடி இணைப்பில் Click பண்ணி வெறும் முகவரியிலோ Click பண்ணுவதன் மூலம் உங்களிற்கு தேவையான இணையப் பக்கத்தை அடையலாம்.

குறிப்பு: இங்கு வகை என குறிப்பிடப்படுபவை யாவன வழமையான உலக ஒழுங்கில் உள்ள வகை களே.

உதாரணமாக

1) கல்வித்துறை
2) சினிமாத்துறை
3) போர்த்துறை
4) வாழ்வியல்துறை

இவ்வாறு இன்னும் பல வகைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கும்.

உபவகை என்னும் போது:

கல்வித்துறையை எடுத்தால் மேலும் பல பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

உதாரணமாக

1) ஆராட்சித்துறை
2) புதிய கண்டுபிடிப்புகள்
4) எதிர்காலத்திட்டம்

இவ்வாறு இன்னோரன்ன பிரிவுகளாக ஒவ்வொரு பிரதான பிரிவுகளும் பிரிக்கப்பட்டிருக்கலாம் அல்லது பிரிக்கப்படாமலும் இருக்கலாம்.

– முற்றும் –

## கோள்களிலே

* மிகப்பெரியது – வியாழன் (Jupitor)
* மிகச்சிறியது – புளுட்டோ (Pluto)
* மிகவும் குளிரானது – புளுட்டோ (இது தண் ணீரும் மீதேன் வாயுவும் சேர்ந்தே பனிப் பந்து போன்ற புதிரானதோர் கோள்

—அளவெட்டி வாதலூரர்—

மெலோடியஸ் மியூசிக்

C. D யில் இருந்து C. D க்கு உங்கள் தெரிவுப் பாடல்களை, ஒலிப் பதிவு செய்யவும் ஒடியோ, கசெட்டில் STEREO முறையில் ஒலிப்பதிவு செய்து கொள்ள.

மெலோடியஸ் மியூசிக்
No: 303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# பச்சை வீட்டுத் தாக்கம்
# Green House Effect

By

Miss Chadraleela Kulasegaram
பட்டதாரி மொழிபெயர்ப்பாளர்
பிரதேச செயலகம்
யாழ்ப்பாணம்.

(சென்ற மாத இதழ் தொடர்)

## ஏனைய வாயுக்கள் (Other gases)

காபன் ரெட்றாகுளோரைட் (Carbon tetra Chloride) ஹாலோகாபன் வாயு (Halo Carbon Gases) அமோனியா வாயு என்பன முக்கியமானவை இவற்றின் தாக்கங்கள் வளிமண்டலத்தில் குறைவாக இருந்தாலும் இவையும் பச்சை வீட்டு வாயுக்களாகத் தொழிற்படுகின்றன.

## வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பால் ஏற்படும் தாக்கங்களும் விளைவுகளும் புவிவெப்பமடைதலும் காலநிலை மாற்றமும்:

பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பானது வளிமண்டலம், உயிர்மண்டலம், நீர்மண்டலம், புவிமண்டலம் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது இவ் வாயுக்களின் அதிகரிப்பினால் வெப்பநிலை அதிகரித்தல், மழைவீழ்ச்சி மாதிரியில் வேறுபாடு, சூறாவளிகள், புயல் போன்றவற்றின் உருவாக்கம் சமுத்திர நீரோட்டங்களின் திசை மாறுதல் கடல் மட்டம் உயர்வடைதல் தாவரங்கள் விலங்குகளில் ஏற்படும் தாக்கம் போன்றவற்றோடு சக்திப்பிரயோக முறை, சூழல் பிரச்சனைகள், மாசடைவு, விவசாயம் காடுவளர்ப்பு, மீன்பிடி, நகரம் என்பவற்றிலும் இதன் தாக்கங்கள் காணப்படும் அத்தோடு மனிதனின் சமூக பொருளாதார கட்டமைப்புக்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

உலகில் பச்சை வீட்டு வாயுக்களின் வெப்பநிலை அதிகரிப்பானது இயற்கையான செயற்கையான முறைகளில் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக புவிவெப்பநிலை அதிகரிப்பு ஏற்படுகின்றது பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பு காரணமாக சராசரி புவிவெப்பநிலை 1990 களில் 1.5° C 4.5° C வரை அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது காலநிலை மாற்றத்திற்கான அரசாங்கங்களின் ஒன்றியம் Inter Government panal on Climrate change ஆய்வின்படி புவி வெப்பநிலை 20–25ம் ஆண்டளவில் 1° C யாலும் 2100ம் ஆண்டுக்கு முன் 3° C யாலும் அதிகரிக்கலாம் என தெரிவித்ததுடன் இவ் அதிகரிப்பு நிலையானதல்ல எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது 21ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் புவி வெப்ப் நிலை Ipcc கணிப்பின்படி இந்த மதிப்பீடானது இதைவிட உயரலாம் என நம்பப்படுகின்றது.

இவ் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக கால நிலையில் பாரிய தாக்கம் ஏற்படும் பிரதானமாக உள்ளூர் பருவரீதியான புவிவெப்ப நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் மித வெப்ப வலயங்களில் (Temperature zones) மாரிகாலம் குறைவாகவும் கூடானபருவம் நீண்டதாகவும் சூடாகவும் காணப்படும். ஆவியாக்கவீதம் அதிகரிக்கும் அதன் காரணமாக மழைவீழ்ச்சி அதிகமாகும். அயனப்பகுதிகள் மித வெப்பமாகவும் ஈரமாகவும் உப அயனப்பகுதிகள் வரட்சியாகவும் காணப்படும் மேற்கூறப்பட்ட 3 வலயங்களிலும் பயங்கரமான விளைவுகள் வெப்ப நிலை அதிகரிப்புக் காரணமாக ஏற்படலாம். தண்டிராப் பகுதிகளில் (Tundra) உறைந்த மண் உலரத் தொடங்கும் உயிரின அழிவும் மேலதிகமாக பச்சை வீட்டு வாயுக்களை வெளியிடுவதற்கும் அதிகரிப்பதற்கும் காரணமாகின்றது மேற்கூறப்பட்ட இச் செயற்பாடுகள் காலநிலையில் சங்கிலி போல மீண்டும் மீண்டும் இடம்பெறும் இதனால் வளிமண்டல வெப்பநிலையும் அதிகரிக்கும்

Ipcc அவதானிங்பின்படி 21ம் நூற்றாண்டில் கால நிலை மாற்றங்கள் காரணமாக வளிமண்டல சுற்றோட்ட அமைப்பு மாற்றம் அடையும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இவ் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக அயனவலயச் சூறாவளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். இப்போது சூறாவளிகள் இல்லாத இடங்களில் சூறாவளிகள் தோன்றலாம் உலகில் நிலவாழ் உயிரினங்களையும் மக்களையும் மழைவீழ்ச்சி வெப்பநிலை, மாற்றம் என்பன பாதிக்கலாம் இதனால் ஆவியாக்க ஆவியுயிர்ப்பு ஈரப்பதன், கழிவு நீரோட்டம் தரைக்கீழ்நீர் என்பன மாற்றமடையலாம் காலநிலைமாற்றம் காரணமாக பிரதேச ரீதியான பல பிரதான விளைவுகள் ஏற்படுகின்றது. வரட்சி, பாலைவனமாக்கல், மண்ணரிப்பு என்பன ஏற்பட்டு பல நாடுகளின் நிலையான பொருளாதார அபிவிருத்தியை பாதிப்படையச் செய்யலாம். உலகின் சில பகுதிகளில் விவசாயப் பயிர்ச் செய்கை துருவப் பகுதிகளை நோக்கிச் செல்லவும் காடுகளின் பரப்பளவு குறைவடையவும் மண்ணரிப்பு ஜீவாதாரப் பயிர்ச் செய்கை, வெள்ளப் பெருக்கு காட்டுத்தீ போன்ற விளைவுகள் அடிக்கடி ஏற்படலாம்.

(தொடர்ந்து: கடல் மட்ட அதிகரிப்பு)

---

● தலைக்கு எண்ணெய் தேய்த்து நீராடும் தினங்களில் சிலருக்கு கண் பார்வை மசமசவென்று தெளிவில்லாமல் இருக்கும். இப்படிப்பட்டவர்கள், நல்லெண்ணெயை நன்கு பொங்க விட்டு, அதில் ஐந்தாறு மிளகுகளைத் தட்டிப் போட்டுத் தலைக்குத் தேய்த்துக் கொள்ளுதல் உத்தமம். இதனால் கண் பார்வை தீட்க்ண்யம் ஆவதுடன் ஒற்றைத் தலைவலி நீர் பாரம் முதலிய உபாதைகளும் பறந்தோடி விடும்

### நில அளவை வகைகளுள்...

[05ம் பக்கத் தொடர்ச்சி]

### சங்கிலி அளவையின் போது ஏற்படும் சில வழுக்கல்

— சரியற்ற வரிசையாக்கம்
— தொய்தல்
— கவனயீனமாக அடையாளமிடல்
— வெப்பநிலை மாறுதல்
— சங்கிலி நீளத்தில் உள்ள வழு
— இழுவை மாறுதல்
— தவறாக எண்ணுதல் வாசித்தல்
— தவறாகப் பதிவுசெய்தல்

### சங்கிலி நாடா அளவையில் காணப்படும் நன்மைகள்

— முழு அளவீடுகளும் உண்மையாதலால் ஏனை யவற்றை விடச் சிறந்தது.
— மிக இலகுவானது
— பொருத்தமான அளவுத்திட்டத்தில் அளவை யினைக் குறிக்கலாம்.

### குறைபாடுகள்

— நேரம் விரயமாகும்
— மனச்சலிப்பு உருவாகும்
— மரங்கள் அடர்ந்த பகுதிகன்ல் இம் முறை யினைப் பயன்படுத்துவது பொருத்தமற்றது (முக்கோண அமைப்புகளாப் பிரிப்பது கடி னம்)
— பெரிய மேடு, பள்ளங்கள் காணப்படும் பகுதிகளிலும் இதனை மேற்கொள்வது பொருத்தமற்றது.

– மூற்றும் –

---

1922 – ஹேகில் சர்வதேச நீதிமன்றம் தொடக்கம் B B C சேவை ஆரம்பம்.
1923 – ஜப்பானில் பூகம்பம் 1 இலட்சத்துக்கு மேல் மரணம்.
1924 – ரஷ்ய புரட்சித் தலைவர் லெனின் மரணம்.
1925 – டெட்டனசுக்கு எதிரான மருந்து கண்டு பிடிப்பு.
1926 – அமெரிக்காவைச் சேர்ந்த கோதார்ட், 'ரொக் கெட்' டை கண்டுபிடித்தார்,
1927 – நியூயோர்க்கிலிருந்து பாரிஸுக்கு இடையில் நிறுத்தாது சார்லஸ லின் பேர்க் முதற்தட வையாக விமானத்தில் பறந்து சாதனை நிகழ்த்தினார்.
1928 – பிரிட்டனைச் சேர்ந்த அலக்சான்டர் பிளமிங் பென்சிலினைக் கண்டு பிடித்தார்.

— அளவெட்டி வாதவூரர்
அவர்களது நாளேட்டிலிருந்து —


## ஜெயகிருஷ்ணா ரேடர்ஸ்

240, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இறக்குமதியாளர்கள் .....

- வாகனங்கள்...
- மோட்டார் சைக்கிள்...
- சகல விதமான உதிரிப்பாகங்கள்...
- புது விதமான வண்ண வண்ண கதிரைகள்...
- பல விதமான ரயர்கள்...

மொத்தமாகவும் சில்லறையாகவும்
கிடைக்கும் இடம்

## முகாமைக் கணக்கீடு...

[04ம் பக்கத் தொடர்ச்சி]

2. முடிவுக் கணக்குகள் யாவும் பணவீக்கத்தை கருத்தில் கொள்ளாது வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்படுவதனால் தகவல்கள் உண்மையாக அமைய மாட்டாது. எனவே இலாப நட்ட கணக்கு ஐந்தொகை என்பவை மூலம் பெறப்படும் தகவல்களுக்கமைய தயாரிக்கப்படும் கணக்கீட்டு விகிதங்கள் மூலம் எடுக்கப்படும் தீர்மானங்கள் தவறாக அமையலாம்.
3. செலவுக் கணக்கியல் காலத்திற்கு காலம் நிறுவனத்துக்குள் வேறுபடுகின்றன.
4. இவ் நிறுவனம் பல நிறுனைங்களின் தொகுதியில் ஒரு நிறுவனமாக இருந்தால் நிறுவனங்களுகிடையே பின்பற்றப்படும் மாற்றுவிலையிடல் நிதிக் கொள்கைகள் என்பன நிறுவனத்தின் சுதந்திர தொழிற்பாட்டை பாதிக்கின்றன.

நிறுவனம் ஒன்றின் கணக்கீட்டு விகிதங்களினால் அளவிடப்படக் கூடிய அம்ஸங்கள்

1. இலாபத் தன்மை
2. திரவத் தன்மை
3. செயற்பாட்டு விகிதம்
4. நீண்ட கால கடன் தீர்க்கும் தன்மை
5. சந்தை வினைத்திறன்

### கணக்கீட்டு விகிதமொன்றை சமர்ப்பிக்கக் கூடிய முறைகள்

1. பின்ன வடிவம் அல்லது Fraction

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை பகுதி எண் தொகுதி எண் வடிவில் வெளிப்படுத்தல் பின்னவடிவம் ஆகும்.

2. விகித வடிவம் – Proportion

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை ஒப்பிட்டு வெளிப்படுத்தல் விகித வடிவம் ஆகும்.

3. நூற்று வீத வடிவம் – Percentage

இரண்டு மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை நூற்றுவீத அடிப்படையில் கூறுதல் வீத வடிவம் ஆகும்.

உதாரணம்:- விற்பனை 100,000 ரூபாவும் தேறிய இலாபம் 20,000 ரூபாவும் நிலமையுள்ள ஒரு நிறுவனத்தின் விற்பனை தேறிய இலாபம் என்பவற்றுக்கான தொடர்பு பின்வருமாறு அமையும்.

1. பின்னவடிவம் 1/5
2. விகித வடிவம் 5:1
3. நூற்று வீத வடிவம் 20%

கணக்கீட்டு விகித வகைகள் – Types of Accounting Ratios

1. திரவத்தன்மை விகிதங்கள் – Liquidity Ratio
2. இலாபத் தன்மை விகிதங்கள் – Profitability Ratio.
3. செயற்பாட்டு விகிதம் – Operating Ratio.
4. இணைப்பு விகிதங்கள் – Gearing Ratio
5. முதலீட்டு விகிதங்கள் – Investment Ratio

1. திரவத்தன்மை விகிதங்கள் / குறுங்காலக் கடன் தீர்க்கும் விகிதங்கள்.

1. Liquidity Rntio / Short Run Solveucy Ratio.

*நாளாந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான தொழிற்படு மூலதனம் நிறுவனத்திடம் போதியளவு இருக்கின்றதா என்பனை அறிய உதவும் விகிதங்கள் திரவத்தன்மை விகிதங்கள் எனப்படும். அதாவது நிறுவனத்தின் குறுங்கால நிதி ஸ்திரத் தன்மையை மதிப்பாய்வு செய்வதற்கு நிதிப் பகுப்பாய்வாளர், முதலீட்டாளர், வங்கி, கடன் வழங்குனர் ஆகியோரால் பயன்படுத்தப்படும் விகிதங்கள் ஆகும்.

● சித்திரை இதழில்: திரவத் தன்மை விகிதங்கள் தொடக்கம், முதலீட்டுக்கான வருவாய் வீதம் வரை இக்கட்டுரை தொடரும்.

---

## வான சாஸ்திரம்...

[16ம் பக்கத் தொடர்ச்சி]

எங்குமே, எப்போதுமே உள்ள ஈர்ப்புச் சக்தி இழுக்கத் தொடங்க, முகில் சுழரத் தொடங்கியது. இடைவிடாது ஈர்ப்புச் சக்தி இழுக்க, கரையோரத்தில் இருந்த முகிலின் பகுதி நடுப் பகுதிக்கு இழுபட, அம் முகில் தட்டை வடிவம் கொண்டது. தொடர்ந்து ஈர்ப்புச் சக்தி இழுக்க, தட்டை வடிவத்தின் கரையில் உள்ளவை மையத்திற்கு நகர, அம் முகில் பந்து வடிவத்தை அடைந்தது. மேலும் தொடர்ந்து இழுக்க, ஓர் மாபெரும் ஐதரசன் வாயுக் கோளாக உருவாகியது

இந்த ஈர்ப்புச் சக்தியின் இடைவிடாத அமுக்கத்தினால், பந்தான முகிலின் மையம் இறுகி, வெப்பம் உண்டாகி, பிரகாசிக்கத் தொடங்கியது, தொடக்கத்தில் இது உருவாக காரணியாக இருந்த வாயு, வெப்பத்தின் நிமித்தம், சக்தியாக மாறி தொடர்ச்சியாக வெப்பம், வெளிச்சம், Radiation ஆகியவற்றை பரப்பத் தொடங்கியது. இதுதான் சூரியன் பிறந்த கதை!

இதே போன்று, சூரியன் உருவாகிய தட்டை வடிவ முகிலுக்கு அப்பாலே நகர்ந்து கொண்டிருந்த முகில்கள் மீது ஈர்ப்புச் சக்தியின் அமுக்கம் காரணமாக வெவ்வேறு கோள்கள் தோன்றின. இவற்றின் அருகினில் சந்திரன்கள் தோன்றின. இவ்வாறு சூரியனினது குடும்பம் உருவாகியது.

[அடுத்த இதழில் எமது சூரியலுக்கு அண்மையில் இருக்கும் Mercusy / புதன் என்னும் கோளைப் பார்ப்போம்.]

# இசைப்பீடங்கள்

## நெடுந்தீவு வே சுந்தரலிங்கம்

சங்கீத பூஷணம்
சங்கீத மாணவர்களுக்கென
1999 ஆடி மாதம் தொடக்கம்
தென் இந்திய சங்கீத சரித்திரத் தொகுப்பு.

## தெய்வீக இசை

மதறாஸ் தெய்வீக இசையின் மத்திய ஸ்தான மாக விளங்கியது. பல வருடகாலமாக நகரின் பல் வேறு பகுதிகளிலும் அநேக பஜனை மந்திரம்கள் இயங்கிக் கொண்டு இருந்தன. இன்றும் கூட ஒவ் வொரு பகுதியிலும் 2 அல்லது 3 பஜனை மண்டபங் களிலிருந்து வெள்ளி, சனிக்கிழமைகளாகிய தினங் களிலும் மற்றும் விழாத்தினங்களிலும் தெய்வீக இசை இசைக்கப்படுவதை அவதானிக்கலாம். அல் லூரி வெங்கடாத்ரி சுவாமிகள் திருவல்லிக்கேணியில் வசித்து வந்தார். பத்திராசல இராமதாசரின் வழி யில் வந்த ஆதி நாராயணதாஸ் என்பார் மாம்பலத் தில் வசித்து வந்தார். இவருடைய இராம நவமி உற்சவ விழாக்களில் ஆயிரக்கணக்கோர் கலந்து கொண்டனர். தேவாரம், திருப்புகழ் முதலிய தெய் வீக இசையை இளம் சிறாருக்கும், வளர்ந்தோருக் கும் பயிற்றுவிக்கும் தேவார, திருப்புகழ் சபைகள் சென்ற நூற்றாண்டில் இருந்து வளர்ந்து வந்துள் ளன. பல வருடங்களாக மதறாஸ் நகரின் சமய வாழ்க்கையில் வருடந்தோறும் மயிலாப்பூர் பெட்டு நாயக்கன் பேட்டைதனூர் மாதா பஜனைகள் இடம் பெற்றுள்ளன.

தியாகராஜருடைய சீடர்களினால் தொடக்கி வைக்கப்பட்ட மயிலாப்பூர் பஜனை இன்னும் நடை முறையில் உள்ளது. பெட்டு நாயக்கன் பேட்டை நடைபெறும் துளுராமாச பஜனைகளில் B. A. வரதாச சாரியார் பிரபல சங்கீத வித்துவான் விளங்கிய முதலாவது மதறாஸ் பல்கலைக் கழக பட்டதாரி சரையா பாகவதர், பாலசுப்பிரமணிய ஐயர் என் போர் பங்கு பற்றினர். பாண்டு ரம்க மந்திரத்தை ஸ்தாபித்வரும் ''பாகவத பஜனை பத்ததி'' முத லான பல தெய்வீக இசை நூல்களை அருளிச்செய் தவருமான T. P. கொண்டராம ஐயர் B. A என் பார். ''அருட்பா'' பாடியருளிய இராமலிங்க சுவாமி களும் அடிக்கடி மதறாசிற்கு விஜயம் செய்தார். ''ஒருமையுடன் தினது'' என ஆரம்பிக்கும் இவரது புகழ்மிக்க தமிழ் விருத்தம் பார்க்டவுண் கந்தசுவாமி கோவிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் மீது பாடப்பட்ட விருத்தமாகவும் திருவல்லிக் கேணியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பார்த்தசாரதி சுவாமியின் புகழைப்பாடும் பின்வரும் கிருதிகள் இயற்றப்பட்டுள்ளன.

1. ஸ்வரி – வேடலின பார்த்த சாரதி (தோடி) தியாகராஜர்.
2. ஸ்ரீ பார்த்த சாரதி – (பைரவி) மைசூர் சதா சிவராவ்
3. வாச்சம கோசருண்டனி – (அடானா) மைசூர் சதாசிவராவ்
4. நின்று சேவின்சினா – (யதுகுலகாம்போஜி) சுப் பராயசாஸ்திரி
5. பார்த்த சாரதினி – (யதுகுலகாம்போஜி) சுப் பராமதீட்சதர்
6. பார்த்த சாரதினி – (யதுகுலகாம்போஜி) செய் யூர் செவ்வகல் வராய சாஸ்திரி
7. பார்த்த சாரதி நன்று – (மத்தியமாவதி) இராம நாதபுரம்

இவற்றுள் இரண்டாவதாகக் கூறப்பட்டது சமஸ் கிருத மொழியிலும் மிகுதி அனைத்தும் தெலுங்கு மொழியிலும் இயற்றப்பட்டன.

[சித்திரை மாத இதழில் அக்காலத்து ''நன் கொடைகள்'' பற்றிய விளக்கம் தரப்படும்–]

---

1929 – சேர்பியா குரோஷியா, சால்வேனியா இணைந்து யுகோஸ்லாவியாவாக மாறுகிறது.

1930 – புளுட்டோ என்ற புதிய கிரகம் கண்டுபிடிப்பு ஜெர்மன் – ரஷ்யாவிடம் தோல்வியுறுகிறது. இலட்சக்கணக்காண ஜெர்மனிய வீரர்கள் மரணம்.

1944 – அமெரிக்க இராணுவம் ஜெர்மனுக்குள் நுழை கிறது.

1931 – உலகிலேயே உயரமான கட்டிடமாக இருந்த எம்பயர்ஸ்டேட் கட்டிடம் திறக்கப்பட்டது. இலங்கையில் உள்ளக சுயாட்சி வழங்கப்பட் டதுடன் டொனமூர் அரசியல் அமைப்பு அமைக்கப்பட்டது.

1932 – பஹ்ரெய்னில் எண்ணெய் வளம் கண்டுபிடிக் கப்படுகிறது
பி. பி. சி. யின் உலகசேவை நிகழ்ச்சிகள் ஆரம்பம்.

1933 – ஜெர்மனியில் பல்வேறு ஆட்சிக் குழப்பங்களுக் குப்பின் ஹிட்லர் அதிபராகிறார்.

1934 – சுவிஸ் வங்கிகளில் இரகசியக் கணக்கு வைத் துக் கொள்ளும் முறை அறிமுகம்.

1935 – பூமி அதிர்ச்சியின் அளவைக் கண்டறியும் ''ரிச்டர்'' அளவுகால் ''சார்லஸ் ரிச்டர்'' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

1936 – அகில இந்திய வானொலி ஆரம்பம்

1937 – வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோணி அணுவைப்பிளந்தநூதர்மேன்ட் காலமானார். யப்பான் சீனாவை ஆக்கிரமித்தது. சிங்கள மகாசபா எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டார நாயக்காவால் உருவாக்கப்பட்டது.

1938 – உலகின் முதல் வண்ணத் தொலைக்காட்சி அறிமுகம். குவைத்தின் எண்ணை வளம் கண்டுபிடிப்பு ஜெர்மனிய விஞ்ஞானியான ''ஒட்டோ ஹான்'' யுரெனிய அணுவைப் பிளப்பதன் மூலம் ஆற்றலை வெளிக்கொணர முடியுமெனக் கண்டுபிடித்தார். குமிழ்முனைப் பேனா 'போட்டோ கொப்பி' இயந்திரம் அறிமுகம்.

— அமரர் அளவெட்டி வாதவூரர் —

Modern Medicals
மருந்து பால்மா வகைகள்

Modern Commnnication
தொலைத் தொடர்பு சேவைகள்
உள்நாட்டு வெளிநாட்டு தொலை பேசிச் சேவை
Tel / Fax: 041 - 2472
021 - 3078
Available E. Mail And Internet Services

J. C. I Computer
Informatics
**Hardware & Soft Ware Engineering**
**Computer Repairing, Maitenence & Assembling**

இவை அனைத்தும் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்வதற் கென யாழ் - சுண்டிக்குளி **Y. M. C. A** கட்டிடத்தில் அமைந்துள்ளது.

**" உங்கள் தேவை எங்கள் சேவை "**

Y. M. C. A. Building,
109, Kandy Road,
Chundikuly,
JAFFNA.

Y. M. C. A. கட்டிடம்
109, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

## கலப்படம்

''ஓம்... நாராராயண''! இப்படி அடிக்கடி கடை முதலாளி கடவுளை சாட்சிக்கிளுப்பார்.

அவரது நெற்றி, இரு கைகள், கரும்பலகை போன்ற பரந்த நெஞ்சு ஆகியவைகளில் திரிபுண்டர முக் குறிகள் சகிதம் தனது கடை மேசையருகில் வீற்றிருப்பார்.

ஓர் நாள் வியாபாரம் மும்மூரமாக நடக்கும் சமயம்... வாடிக்கையாளர் ஒருவர் சாவதானமாக கடைக்குள் வந்தார்.

''என்ன, கணபதி?,'' என எரிச்சல் கலந்த குரலில் முதலாளி வினவினார்.

''இல்லை முதலாளி,'' என பீடியோடு தொடங் கிய கணபதி, ''இந்த அரிசி, பருப்பு, பயறு எல் லாம் ஒரே வயலிலே வீளைஞ்சதுகளோ எண்டு தான் ன்ன்,'' என இழுத்தார்.

''இதென்ன பேக்கதை'' என்று வெடித்தார் முதலாளி கடவுளையும் மறந்து.

''அப்ப ஏன் முதலாளி, எல்லாத்துக்கையும் ஒரே மாதிரியான கல்லு கிடக்குது?'' என்றானேகணபதி.

முதலாளியின் முகத்தில் ஈயாடவில்லை.

க. ஷாமினி
கொ ' வில்

## மாசி February 2000

### ஆற்றல் அதிர்ஷ்ட எண்கள்

யா / திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம் 0276 யா / புற்றளை மகா வித்தியாலயம் பருத்தித் துறை – 1499 யா / அருணோதயக் கல்லூரி அள வெட்டி – 4941 யா / வேலாயுதம் மகா வித்தியால யம் பருத்தித்துறை – 1438 யா / சாவகச்சேரி மக ளிர் கல்லூரி – 1112 யா / இராமநாதன் கல்லூரி சுன்னாகம் – 5173 யா / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி – 1678 யா / கொக்குவில் இந்துக் கல்லூரி – 4598 யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி – 0801 யா / உய ரப்புலம் மெ. மி பாடசாலை – 2022 யா / பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் – 3716 யா/இணை வில் மத்திய கல்லூரி – 5226 யா / செங்குத்தா இந்து க் கல்லூரி – 4080 யா / உடுவில் முருக மூர்த்தி வித்தியாலயம் – 4731 யா / முத்துத் தம்பி மகா வித் தியாலயம் – 4582.

அதிர்ஷ்ட எண்கொண்ட ஆற்றல் சஞ்சிகை வைத் திருப்போரது பெயர், வகுப்பு, விலாசம் எமக்கு அறியத்தரவும்.

உரிய பரிசில் எம்மாம் அனுப்பப்படும்.

சுந்தர சிவபாலன்
பொருளாளர்.

க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு

திருக்குறள்

**ஒழியியல்**

தொகுப்பு: விலை ரூபா **30** /-

திரு. தி. மதிவதனன்

கிடைக்கும் இடங்கள்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு தொடர்பு கொள்ளவும்

முல்லை அச்சகம்

ஆடியபாதம் வீதி, (புனித சவேரியார் ஆலயம் முன்பாக)
நல்லூர் யாழ்ப்பாணம்

**அல்பா மிக்சர் - ALPHA MIXTURE**

- மிக்சர், பகோடா, காராசுவை, சீனிமுறுக்கு, பருப்பு, கடலை, கிழங்குப்பொரியல் மஸ்கட், பூந்திலட்டு

  ஆகியவற்றுடன்

- கண்டொஸ் வகைகள், பிஸ்கட் வகைகள், சோடா வகைகள், ரொபி வகைகள்

ஆகியவற்றை நீங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்வுகள், பிறந்ததின நிகழ்வுகள், ஏனைய விசேட நிகழ்வுகளுக்கு ஓடர்கள் விசேட கழிவுடன் வழங்கப்படும்.

**தரமானது, சுவையானது நீங்கள் நாடவேண்டியது**

**" அல்பா மிக்சர் "**

பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

57, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

" ஆற்றல் சஞ்சிகை அபிவிருத்திக் குழு"

ப. குகராஜா – விநியோகம், ம. அன்ரனி – செயலாளர், சுந்தர சிவபாலன் – பொருளாளர், நி. தென்னகோன் – விளம்பரம், சோ. முத்துராஜா – பதிவாளர், சந்திர புவனேஸ்வரன் – பதிப்பு நுட்பம், வா. கலாதரன் ஆசிரியர், GBன் அலோஷியஸ் – ஆகியோர்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, 76, கண்டி வீதியிலுள்ள யாழ் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தினருக்காக ஆற்றல் சஞ்சிகை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களால் 07-03-2000 அன்று வெளியிடப்பட்டது.

அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம், 402, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.